Registered as a news paper.　　பக்கங்கள்: பத்து　　விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ　ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-1295)

மலர் : 01　திருவளளுவர் ஆண்டு: 2034 ஆடி 29 ஆம் நாள்,　ஹிஜ்ரி 1425　ஐ.ஆகிர் 15 (14.08.2003)　வியாழக்கிழமை　இதழ்: 315




கிளிநொச்சி வந்த சொல்ஹெய்மை, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வரவேற்பதை முதற்படத்திலும், நோர்வே தூதுவர் சொல்ஹெய்முடன் தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேச்சு நடத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## நோர்வே அலுவலர் இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மனித உரிமைகள் நிலை பற்றி ஆராய்வதற்காக - நோர்வேயின் மனித உரிமை அலுவலர் இன்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதருகின்றார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் தகனம்

(மன்னார்)

மன்னார் கடற்கரையில் - கடந்த மாத இறுதியில் கரையொதுங்கிய இந்திய மீனவரின் சடலம் அடையாளம் காணப்படாமையினால், மன்னார் பதில் நீதிவான் எஸ்.ஜோன்தாசனின் உத்தரவுக்கமைய நேற்றையதினம் மன்னார் பொது மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து தமிழ்ச்செல்வன் - சொல்ஹெய்ம் முக்கிய பேச்சு

## தடங்கலாக உள்ள விடயங்கள் குறித்து ஆராய்வு

- கிளிநொச்சியிலிருந்து ஜெகதீபன் -

**தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும், அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நேற்றுப் பேச்சு நடத்தினார்.**

**இந்தச் சந்திப்பில் சர்ச்சைக்குரியதாகியுள்ள குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பான விடயத்தில் எந்த முடிவும் எட்டப்படவில்லை எனத் தெரியவருகிறது.**

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவுக்கும் - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றது.

நோர்வேயின் தரப்பில் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வே தூதரக அதிகாரி தோமஸ் பிராங்லண்ட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முன்னதாக - நேற்றுக்காலை 10.30 மணிக்கு விமானப்படைக்கு சொந்தமான உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி பொது விளையாட்டரங்கை சென்றடைந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு போர்ப்பயிற்சி பிரதேசம்; இன்னும் ஒதுக்கப்படவில்லை!

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

போர்ப்பயிற்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடல் பிரதேசமொன்றை ஒதுக்கிக் கொடுப்பது தொடர்பாக, அரசாங்கம் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லையென - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக, யுதத நிறுத்தக் கண்காணிப்புக்குழு யோசனைகளை முன்வைத்துள்ள போதிலும் அதுகுறித்து, தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், 1982 இல் நிறைவேற்றப் பட்ட கடற்பிராந்தியம் சம்பந்தமான தீர்மானத்திற்கு அமைவாகவும், அரசியல் சாசனத்திற்கு அமைவாகவும், அரசு செயல்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பான உண்மை நிலையை விளக்கியுள்ளோம்

### சொல்ஹெய்மைச் சந்தித்தபின் தமிழ்ச்செல்வன் பேட்டி

(கிளிநொச்சி)

தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும், அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைவு பற்றியும்,அதனை தொடர்ந்து முன்னெத்து செல்வது தொடர்பாகவும் விரிவாக பேசப்பட்டது என, நேற்று நோர்வேத் தூதுக்குழுவுடனான சந்திப்பின் பின்னர் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோது,

இத்துடன்,அரசினுடைய இடைக்கால திட்ட வரைபு குறித்து - பாரிஸில் சட்ட நிபுணர்களுடன் ஆராய்ந்து, இறுதி வடிவத்தினை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளோம்.

குரங்குப்பாஞ்சான்முகாம் தொடர்பாக - விடுதலைப் புலிகளின் உண்மை நிலையை, தெளிவான நிலைப்பாட்டை நோர்வே தூதுவருக்கு விளக்கியுள்ளோம். இந்த விடயம் தொடர்பாக எந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோருடன் விளையாடிய மாணவன் பரிதாபமாக உயிரிழப்பு!

### காரைநகரில் நேற்றுச் சம்பவம்

(காரைநகர்)

காரைநகர் ஊரிப்பகுதியில் - நேற்றுக்காலை கிளைமோர் வெடித்ததில் பாடசாலை மாணவன் ஒருவன் ஸ்தலத்திலேயே பலியானதுடன், ஐந்து சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் சுந்தரம்பிள்ளை நல்லராசா (வயது 17) எனும் பாடசாலை மாணவன் பலியாகியதுடன், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான பரமேஸ்வரன் ரதி (வயது 13), பரமேஸ்வரன் மதுசன் (வயது 6), பரமேஸ்வரன் மதுர்ஷா (வயது 7) மற்றும் சற்குணராஜா ஜெயமாலா (வயது 14), அம்பிகைபாகன் கஜேந்தினி (வயது 12) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

இவர்களில் மதுசன், கஜேந்தினி ஆகியோர் காரைநகர் அரசினர் வைத்திய சாலையிலும், ஏனையோர் யாழ்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் அபிலாஷைகள் தீராவிட்டால் இன்னும் பத்து வருடங்களின் பின் முஸ்லிம் பிரபாகரன் உருவாகலாம்

### நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில்

(மட்டக்களப்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் - முஸ்லிம்களின் அபிலாஷைகள் தீர்க்கப்படாமற்போனால், இன்னும் பத்து வருடத்தில் முஸ்லிம் பிரபாகரன் உருவாவது தவிர்க்க முடியாது என, முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறையில் நேற்று அவரது அலுவலகத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், சமாதானப் பேச்சில் ஈடுபடும் முஸ்லிம் தரப்பினர் - முஸ்லிம்களுக்கான தனி நிர்வாக அலகு சம்பந்தமாக அக்கறை காட்ட வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கண்காணிப்புக்குழுத் தலைவருடன் பேசியபின்பே குரங்குப்பாஞ்சான் விவகாரத்தில் முடிவு எடுக்கப்படும்!

### கிளிநொச்சியில் எரிக் சொல்ஹெய்ம்

(கிளிநொச்சி)

குரங்குபாஞ்சான் முகாம் சம்பந்தமாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருடன் கலந்துரையாடிய பின்னர்தான், அது சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கப்படும் என, நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப்பணியகத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்டவர்களிடையே காணப்படும் வேற்றுமைகளை நீக்கி, நின்றுபோன சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதே தனது வருகையின் நோக்கமென அவர் மேலும் தெரிவித்தார்.

இன்று மட்டக்களப்புக்குச் செல்லவுள்ள சொல்ஹெய்ம் அங்குள்ள அரசசார்பற்ற பிரதிநிதிகளைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகள் சம்பந்தமாக கேட்டறிந்துகொள்வார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வவுனியாவில் ஜூலை மாதத்திலிருந்து முப்பத்தொன்பது பேரை காணவில்லை

ஜூலை மாதத்திலிருந்து வவுனியாவில் முப்பத்தொன்பது இளைஞர்கள் காணாமற்போய்விட்டதாக அறியப்படுகின்றது.

முப்பத்தொன்பது பேர் காணாமற்போனது தொடர்பாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறைப்பாடுகள் யாவும், வவுனியா பிரதேசத்திலிருந்து கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போன அநேகமானவர்கள் - 18 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும், மற்றவர்கள் பாடசாலை மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துமாறு மாநகரசபை ஆணையாளர் அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயப்பகுதியில் கட்டாக்காலிகளின் எச்சங்களால், அங்கப்பிரதிட்சிணம் செய்வோர் உடல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனைக் கட்டுப்படுத்த உதவுமாறு, யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக, மாநகரசபை செய்திக்குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது. அதில் -

நல்லூர் ஆலயச்சூழலில் கட்டாக்காலியாகத் திரியும் வளர்ப்பு மிருகங்களால், ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன், இவை ஆலயச்சூழலில் எச்சங்களைக் கழிப்பதால், அங்கப் பிரதிட்சிணம் செய்யும் பக்தர்கள் நாளுக்குநாள் உடல்ரீதியாகப் பாதிப்படைவது அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்தவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஆலய உற்சவம் அமைதியாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெறுவதற்கு - ஆலயச்சூழலிலுள்ள பொதுமக்கள், தமது வளர்ப்பு மிருகங்களைக் கட்டிவைக்குமாறு மாநகரசபை கோரியுள்ளது.


## ஒப்பறேட்டர் தேவை

சங்கானை நிறைஞ்சனாஸ் தியேட்டருக்கு சினிமா புரஜக்டர் ஒப்பறேட்டரும், ஒப்பறேட்டர் வேலை பழக விரும்புபவர்களும் தேவை.

17.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்.

முகாமையாளர்,
நிறைஞ்சனாஸ்
திரையரங்கு,
சங்கானை.

(சி-1344)


## வலைபந்தாட்டப் போட்டியில்

# லண்டன் பிராந்திய அணியை தாயக அணி தோற்கடித்தது!

(லண்டன்)

லண்டன் சென்றுள்ள தமிழீழ தாயக வலைப்பந்தாட்ட அணியினர், இரண்டாவது தடவையாகவும் பிராந்திய அணியொன்றுடன் நடைபெற்ற போட்டியில் 59:38 என்ற கணக்கில் வெற்றிபெற்றுள்ளனர்.

லண்டன் பிராந்திய அணியான-நியூரஷன் அணியுடனான நான்கு ஆட்டங்கள் கொண்ட சிநேகபூர்வ ஆட்டத்தில் - முறையே 17:11, 14:11, 15:5, 13:11 என்ற கணக்கில் தோற்கடித்தனர்.

அத்துடன் - தமிழீழ அணியினரால் தமிழீழம் பொறிக்கப்பட்ட நினைவுச்சின்னம் அந்த அணிக்கு வழங்கப்பட்டது. இதனை தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் வழங்கினார்.

இதுவரை லண்டனில் பதினான்கு அணிகளுடன் விளையாடியுள்ள தாயக அணி, அங்கு நடைபெற்ற தமிழீழ விளையாட்டுப் போட்டியின் கேடயத்தையும் தமதாக்கிக் கொண்டனர். இவர்கள், எதிர்வரும் இருபத்தாறாம் திகதி தாயகம் நோக்கி திரும்ப விருப்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய இயக்குநர்சபை தெரிவு!

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர்சபை தெரிவு, அண்மையில் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் தலைவர் எஸ்.சிறில் (சுண்டிக்குளி ப.நோ.கூ.சங்கக்கிளை), என்.ரி.கணநாதன் (புங்கன்குளம் ப.நோ.கூ.சங்கக் கிளை), சபா.தியாகராஜா (ஆனைப்பந்தி ப.நோ.கூ.சங்கக்கிளை),எ.அலெக்ஸ் (சின்னக்கடை ப.நோ.கூ.சங்கக்கிளை), எம்.கிருஷ்ணசாமி(வண்ணார்பண்ணை ப.நோ.கூ.சங்கக்கிளை), யே.சுஜீதரன்(வெள்ளாந்தெரு ப.நோ.கூ.சங்கக்கிளை), மகேந்திரராஜா (நீராவியடி ப.நோ.கூ.சங்கக்கிளை) ஆகியோர் புதிய இயக்குநர் சபைக்கு தெரிவுசெய்யப்பட்டனர்.


**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்
மாதவன், ஜோதிகா நடித்த

10.30, 2.30, 6.30

நாளை முதல் இந்தியாவிலும்,
இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
விஜயகாந், கிரண் நடித்த

**தென்னவன்**

10.30, 2.30, 6.30, 9.30 (சி-1284)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித், சிம்ரன் நடித்த

**வாலி**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
BULE STREAK
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)


## மரண அறிவித்தல்

### றேடியோ மார்க்கோணி

### `வேலாயுதம் மோகன்

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட றேடியோ மார்க்கோனி என அழைக்கப்படும் வேலாயுதம் மோகன் அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் வேலாயுதம் தவமணி (கனடா) தம்பதிகளின் நான்காவது புதல்வனும், காலஞ்சென்ற கனகசபை, கஜமுகதேவி தம்பதிகளின் மருமகனும், நிவேதிகா, நிவேதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகிலன் (பிரான்ஸ்), ஈஸ்வரி (கனடா), குருபரன் (சுவிஸ்), முகுந்தன் (லண்டன்), கலாதரன் (லண்டன்), ஜங்கரன் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், பங்கஜன், இந்து (கனடா), சசிகலா (லண்டன்) காலஞ்சென்ற நற்சபேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 14.08.2003 இன்று (வியாழக்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆவரங்கால் கரதடி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சிவன் வீதி,*
*ஆவரங்கால்.* (452)
**மனைவி, பிள்ளைகள், தந்தை, தாய், சகோதரர்கள்.**


ஓவ் (f) செற் முறையில் அச்சுப் பதித்து இப்போது உங்கள் தேவையை, தங்கள் சேவையாக கருதி ~ தரமாக, நேர்த்தியாக என்றும் தெளிவாகப் பார்க்க, பாதுகாக்க அச்சுப் பதித்துத் தருகிறார்கள்

# சுரபி பதிப்பகத்தினர்

பத்திரிகைகள்
மலர்கள்
சஞ்சிகைகள்
. பெரிய அளவிலான போஸ்ரர்கள்
துண்டுப் பிரசுரங்கள்
வைபவ அழைப்பிதழ்கள்
சமய சந்நிதான விழாக்கால போஸ்ரர்கள்

உங்கள் தேவை எதுவானாலும் நிறைவுடன் பெற்றுக்கொள்ள ஒருமுறை சுரபியை நாடுங்கள்.

**குறைந்த கட்டணம் குறுகிய தவணை**

உங்கள் ஆக்கங்கள் உங்கள் வெளியீடுகள்
உங்கள் எண்ணக்கிடக்கைகள்
உங்கள் கற்பனை வளங்கள்

இவற்றிற்கு செயல் வடிவம்தான் சுரபியின் நேர்த்தியான கணினி தட்டெழுத்து அமைப்பும், தெளிவான அச்சுப்பதிப்பும்.

உங்கள் தெரிவு என்றும் ஒரே தெரிவாக இருக்கட்டும்.
அதுவே சுரபியாக இருக்கட்டும்.

# சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி
2223922
2225107

# தாயகத்தில் அச்சமற்ற வாழ்வை ஏற்படுத்துவதே எமது நோக்கம்!

## உலைக்களம் அறிமுகவிழாவில் புதுவை



(திருகோணமலை)

விடுதலை என்பது - தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்துக்கான வரலாறு மட்டுமல்ல. இது எல்லோருக்கும் பொதுவானது. எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் தனி அரசு அமைத்திருக்கிறோம். அதன் காரணத்தால், இலங்கை அரசாங்கம் எம்மோடு பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது. எமது தாயகப் பிரதேசத்தில் அச்சமற்ற வாழ்வை ஏற்படுத்துவதே எமது நோக்கம். இவ்வாறு - விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

வியாசனின் 'உலைக்களம்' என்னும் கவிதைத் தொகுதி அறிமுக விழா - கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பதிலுரை ஆற்றியபோதே, புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலக்கியவாதி ச. தர்மராசா சிறப்புரையாற்ற, யதீந்திரா அறிமுக உரையினையும், கவிஞர் தில்லை முகிலன், வில்வரெத்தினம், வல்வை ந.அனந்தராஜ் ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும் ஆற்றினர். சட்டத்தரணி கா.சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், புதுவை இரத்தினதுரை மேலும் உரையாற்றுகையில்,

போர்க்கால இலக்கியத்தை எவரும் எங்கிருந்தும் செய்யலாம். ஆனால், போராட்ட இலக்கியத்தை போர்முனையில் இருந்தே செய்ய முடியும். இது போராளிகளால் மாத்திரமே முடியும். நான் பரிசுக்காகவும், பதவிக்காகவும், பவிசுக்காகவும் கவிதைகள் எழுதுவதில்லை. இவை எமக்கு வேண்டாம். கவிதை ஊடாக மக்கள் பணி செய்வதே எனது நோக்கம். எமது போராட்டத்தில் கரும்புலிகள் செய்த தியாகங்களுக்கு முன்னால், நான் போராட்டத்தில் மக்களுக்கு உணர்ச்சியூட்டத் தக்கதாகக் கவிதைகள் படைத்தது, கால்தூசுக்குச் சமனானது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் - புதுவையின் பாடல் வரிகளைக் கேட்டு, ஒரு காலத்தில் இணைந்து கொண்டவர்கள் அதிகம். இதனை ஏற்படுத்துவதே எனது நோக்கமாகவும் இருந்தது.

தொடர்ந்துவரும் காலங்கள் எம்மைப் பொறுத்தவரை இருண்ட யுகமாகவே இருக்கும். இதனைத் தொடர்ந்து விடியல் ஒன்றும் வரும்.

யுத்தத்தை இந்த அகிலத்தில் வெறுப்பவர்கள் யார் என்றால், அது விடுதலைப் புலிகளே. போர் மூலம் பொறுப்புக்களை முழுமையாக உணர்ந்தவர்கள் நாங்கள். யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால், அதனைத் தொடர்ந்து நடத்தவும் நாங்கள் தயங்கமாட்டோம். ஆனால், யுத்தத்தை வலிந்து நாங்கள் ஏற்படுத்த மாட்டோம். நாம் வாழ வேண்டுமென ஆசைப்படுகின்றோம். நாங்களே எமக்கு எல்லாமாக இருக்க விரும்புகின்றோம். நாம் எமது தாயகத்தில் வாழ்வைக் கழிக்க விரும்புகின்றோம் எனத் தெரிவித்தார்.

# தனியார் பஸ் உரிமையாளர்கள் கொழும்பில் வேலைநிறுத்தம்!

## போக்குவரத்துக்கள் பாதிப்பு

(கொழும்பு)

பொலிஸாரின் கெடுபிடிகளைக் கண்டித்து, கொழும்பு மாவட்டத்தில் நேற்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நடத்திய ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தினால் பெரும் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டன.

தனியார் பஸ்கள் மீது போக்குவரத்துப் பொலிஸார் காட்டிவரும் கெடுபிடிகள் தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுக்கள் திருப்தியான முடிவினைத் தராததாலேயே, தாம் இந்த அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டதாகத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேயரத்ன தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்தத்தினால்- நேற்று கொழும்பு நகரில் பலத்த போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டதுடன், அலுவலகப் பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் போன்றோர் பஸ் வசதிகளின்றிப் பலத்த சிரமங்களை எதிர்நோக்கினர்.

# சொக்ஸியின் சட்டமூலங்கள்; எதிர்த்து வழக்குத்தாக்கல்!

நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த இரண்டு சட்டமூலங்கள், அரசியல் யாப்புக்கு முரணானவை எனவும், இதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதைத் தடைசெய்ய வேண்டும் எனவும், உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வங்கிக் கடன்களை மீள அறவிடுவது தொடர்பான விசேட திருத்தச்சட்ட மூலம் மற்றும் கடன் அறவீட்டு திருத்தச்சட்டமூலம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் அபிவிருத்தி தொடர்பான சட்டவல்லுநர்கள் சங்கத்தின் சார்பில் ரோகன விஜேசேன, குசுமினி கீர்த்திகுமார ஆகியோர் இந்த வழக்கினைத் தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கில் சட்டமா அதிபர், பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

# மோட்டார் சைக்கிள் பதிவுகள்; புதிய நடைமுறைகள் அமுல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளைப் பதிவு செய்வதற்கான புதிய நடைமுறை இம்மாதம் முதலாம் திகதிமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி மோட்டார் சைக்கிளைப் பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் - வாகனத்தைக் கொள்வனவு செய்யும் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் முதல் பக்கத்தில் நிறுவன பதிவு இலக்கம், பதிவுத்திகதி என்பன இடப்பட்டிருக்கவேண்டும்.

அத்துடன் முதலாம் பக்கத்திலும், நான்காம் பக்கத்திலும் நிறுவனத்தின் முத்திரை பொறிக்கப்பட்டு, உரிய நிறுவனத்தின் அதிகாரியால் ஒப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

விற்பனையை உறுதிப்படுத்தும் நிறுவன அதிகாரியால் ஒப்பமிடப்பட்ட கடிதத் தலைப்பு (Letter Head)- மோட்டார் போக்குவரத்துத் தலைமை அலுவலக மோட்டார் வாகன பரிசோதகரால் உறுதிப்படுத்தி ஒப்பமிடப்பட்டதும் சுங்கப் பதிவு இலக்கம், பதிவுத் திகதி மற்றும் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட திகதி ஆகியவை குறிக்கப்பட்டதும் செசி மற்றும் இயந்திர இலக்கம் குறிக்கப்பட்டதுமான படிவம்

தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டின் நிழற்பிரதி- கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டது.

கொள்வனவுசெய்து ஆறு மாதங்களுக்கு மேற்பட்டிருப்பின் பதியாத காரணத்தை உறுதிப்படுத்தி, சமாதான நீதிவானிடம் பெறப்பட்ட சத்தியக்கூற்றுக் கடதாசியும் சமர்ப்பிக்க வேண்டும் என மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

# நூறு மில்லியன் ரூபா செலவில் அறுபத்தேழு அடி புத்தர் சிலை!

## அமைச்சர் கருஜெயசூரியா அறிவிப்பு

(கொழும்பு)

அறுபத்தேழு அடி உயரமுள்ள பாரிய புத்தர் சிலையொன்று அமைக்கப்படவுள்ளதாக, அமைச்சர் கரு ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

இந்தப் புத்தர்சிலை நூறு மில்லியன் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளதாகவும், இதனை நிறுவ இந்தியாவிலிருந்து இலங்கைக்கு, பிரபல சிற்பிகள் அழைத்து வரப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தப் புத்தர் சிலை, கடந்த ஆயிரத்து ஐந்நூறு வருடங்களில் நிறுவப்பட்ட சிலைகளைவிட மாறுபட்ட ஒன்றாக இருக்குமெனவும், இச்சிலை 2005 ஆம் ஆண்டு முற்றாக நிறுவப்பட்டுவிடும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களில், 19 ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான போர் அழிவுகளால், வழமையாகப் பாவிப்பிலிருந்த கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், யாத்திரை ஸ்தலங்கள் அனைத்தும் இதுவரை எதுவித திருத்தங்களும் மேற்கொள்ளப்படாமல் இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

## பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் என்பன, நேற்றுமுன்தினம் கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், கரவெட்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய நடவடிக்கைகளை முன்னேற்றுதல், மற்றும் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தீருவிலில் பன்னிரு வேங்கைகள் நினைவுத்தூபி மீளப் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவுத்தூபி, மீண்டும் வல்வெட்டித்துறை- தீருவிலில் அமைக்கப்படவுள்ளது.

இவர்களது நினைவாக, தீருவிலில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபிகள், உருவச்சிலைகள் 1996 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் - யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்தபோது இடித்து நொறுக்கப்பட்டன.

வல்வெட்டித்துறை மக்களின் ஒத்துழைப்புடன், வல்வை மக்கள் ஒன்றியம் இதை மீள அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

# தொழில்நுட்பக் கல்லூரி முறைகேடுகள் விசாரணைகள் மூலம் தெரியவந்தன!

## மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் அறிவிப்பு

நாட்டிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் முறைகேடுகள் இடம்பெறுவது விசாரணைகளிலிருந்து தெரியவந்திருப்பதாக மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்தார்.

தொழில்நுட்பக் கல்லூரிகளின் குறைபாடுகளை ஆராய நடத்தப்பட்ட விசாரணைகளின்போதே, இந்த முறைகேடுகள் மற்றும் மோசடிகள் பற்றிய தகவல்கள் தெரியவந்துள்ளன.

1995 ஆம் ஆண்டின் சுற்றறிக்கையின்படி - தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்பிக்கும் போதனாசிரியர்கள், வாரத்தில் 25 முதல் 30 மணி நேரம் பணியாற்ற வேண்டும். ஆனால், தொழில்நுட்பக் கல்லூரிப் போதனாசிரியர்கள் ஆகக் குறைந்தளவு நேரத்தை விடவும் குறைவான நேரத்திலேயே மாணவர்களுக்குக் கற்பிக்கின்றனர்.

இந்த நேரத்தில், தனியான விரிவுரைகளுக்குப் போதனாசிரியர்கள் சென்றுவிடுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதைவிட, தொழிநுட்பக் கல்லூரிகளுக்கான மாணவர்கள் சேர்ப்பு, பதவியுயர்வு, இடமாற்றம் ஆகிய விடயங்களிலும் குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளது என்றும்,

அலுவலக வதிவிடங்கள் மற்றும் வாகனங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டிருப்பதாகவும், இந்த விசாரணைகள் மூலம் தெரியவந்திருக்கின்றது.

# நூறு ஏக்கர் காடு தீயில் எரிந்து நாசம்

தம்புள்ள பகுதியில் - தேன் சேகரிப்பாளர்கள் வைத்த தீயினால், சுமார் நூறு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்த காட்டுமரங்கள் மற்றும் மருத்துவத் தேவைக்குப் பயன்படும் மூலிகைகளும் அழிந்து நாசமாகின.

தேன் சேகரிப்பாளர்கள், கொம்புத் தேன் எடுப்பதற்கு முன்னர், தேனீக்களை விரட்டுவதற்காகத் தீ வைத்திருந்தனர். நூற்றுக்கணக்கான தேன் சேகரிப்பாளர்கள் - இந்தத் தேன் சேகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். தம்புள்ளயிலிருந்து 18 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நயகந்த காட்டிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

இப்பகுதியில் ஒரு போத்தல் தேன் 70 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டு, கொழும்பு நகரில் 300 ரூபாவுக்கு விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.




வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பில் ஜே.வி.பியினர் நேற்றுமுன்தினம் கறுப்புக்கொடிகளுடன் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் சில காட்சிகள்

# மடுமாதா ஆலயத்தின் திருவிழா; மன்னார் ஆயர் ஆசிச்செய்தி!

மடுமாதா ஆலயத் திருவிழா நாளை நடைபெறுவதையொட்டி, மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆசிச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார். இந்த ஆசிச் செய்தியின் முழுவிபரம் வருமாறு-

இலங்கை மண்ணில் கிறிஸ்தவம் வேரூன்றி இற்றைக்கு ஏறக்குறைய 500 வருடங்களுக்கு மேலாகின்றது. கிறிஸ்தவம் எம் மண்ணில் காலடி எடுத்து வைத்த தொடக்க காலத்திலிருந்தே - அன்னை மரியாள் மேல் உள்ள பக்தி மக்கள் மத்தியில் வளர்ந்து வந்துள்ளது. மன்னார் கிறிஸ்தவர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. மன்னார் மண்ணில் ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக வேதகலாபனை இடம் பெற்றது.

இந்தவேளையில், கலாபனைக்குத் தப்பியோடிய கிறிஸ்தவ மக்கள், தாம் அருமை பெருமையோடு வணங்கிவந்த மரியன்னையின் திருச்சொரூபத்தையும், தம்மோடு எடுத்துச் சென்றனர். மாந்தையில் வைத்து ஒரு நூற்றாண்டளவாக வணங்கப்பட்ட இந்த மரியன்னையின் திருச்சொரூபம் - மடுவுக்கு 1670 ஆம் ஆண்டு கொண்டுசெல்லப்பட்டது. அங்கு "மடுமாதா" என்ற பெயரில் மரியன்னை கோயிலில் எழுந்தருளினார். இதுவே மடுத்திருப்பதியினதும், அங்குள்ள அற்புத திருச்சொரூபத்தினதும் சுருக்கமான ஆரம்ப வரலாறாகும்.

அன்றுதொட்டு இன்றுவரை மடுத்திருப்பதி - மக்களுக்கு ஆன்மீக வளங்களைப் பெற்றுக்கொடுக்கும் அருளின் இடமாக இருந்து வருகின்றது. ஆடி மற்றும் ஆவணி மாதங்களில் நடைபெறும் முக்கிய திருவிழாக்களின்போது, ஆயிரக்கணக்காக, ஏன் இலட்சக்கணக்கான மக்கள் கூடிவருகின்றார்கள். ஆன்ம தாகத்தோடு இங்கு இப்படி வருகை தரும் மரியன்னையின் பக்தர்கள்- இறை அனுபவத்தையும், ஆன்மீகப் புதுப்பித்தலையும், உள்ளார்ந்த அமைதியையும், ஞான மகிழ்ச்சியையும் பெற வழிசெய்கின்ற, சகல ஆயத்தங்களும் மன்னார் ஆயரின் வழிகாட்டுதலில், இத்திருத்தல நிர்வாகத்தால் செய்துகொடுக்கப்படுகின்றன.

இத்திருத்தலத்திற்கு, மேற்படி நோக்கத்தைத் தவிர்த்து, வேறு நோக்கங்களுக்காக வருவதும், ஆனமீக தேடலுக்கு ஊறுவிளைவிக்கும் மதுப்பாவனை, களியாட்டப் போக்குகள் அனைத்தும் இங்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

இந்த வருடம் இடம்பெறவுள்ள ஆவணி 15 ஆம் திகதிப் பெருவிழா, மரியன்னை - இறைவனால் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதைக் கொண்டாடும் திருநிகழ்வாகும். இதற்குப் பெருந்தொகையாக பக்தர்கள் வருகை தரவுள்ளனர். இப்பெருவிழாவிற்கு ஆயத்தமாக 9 நாட்கள் "அன்பியம்" என்னும் கருப்பொருளை மையப்படுத்தி, ஆயத்த வழிபாடுகள், இறைவார்த்தைப் பகிர்வு என்பன - இம்மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. மடுத்திருப்பதியிலே இப்படிப்பட்ட பெருநிகழ்வுக்கேற்ப அமைதியான சூழல் அமைத்து - அரச அதிபர்கள், படையினர், விடுதலைப் புலிகள் ஆகியோர் கொடுக்கும் முழு ஒத்துழைப்புடன் இப்பெருவிழா இடம பெறுகின்றது.

யாழ். ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம், சிலாபம் ஆயர் அதிவந்தனைக்குரிய மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகை, மன்னார் ஆயராகிய என்னுடனும், இலங்கை முழுவதும் இருந்து வருகைதரும் குருக்களுடனும், திருவிழாத் திருப்பலியை நிறைவேற்றுவார்கள். அதைத் தொடர்ந்து வானமே பூத்ததுபோல் படை சூழ்ந்து நிற்கும் பக்தர்கள் வெள்ள மத்தியிலே, மடு அன்னையின் அற்புதத் திருச்சொரூபம் பவனியாக எடுத்து வரப்பட்டு, இறுதியில் ஆசீர் வழங்கப்படும். மருதமடுத் திருத்தாயாரின் அற்புதத் திருத்தலத்திற்கு வருகைதரும் அனைவரும், இகபர நலன்களால் நிறைக்கப்படவேண்டும் என ஆசீர் கூறிநிற்கின்றேன் என மன்னார் ஆயா இராயப்பு யோசப் ஆண்டகை தனது ஆசிச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற 'தமிழ் விழா' நிகழ்வில் முற்றிலும் ஆண் நடன மாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்ட 'எங்கிருந்தோ வந்தான்' என்ற நாட்டிய நாடகத்தின் ஒரு கட்டத்தினையும் இதனை இயற்றி இயக்கிய நடன ஆசிரியர் அன்ரனை படத்தில் காணலாம்.

# இலவச உணவு வழங்கும் திட்டம் அடுத்த வருடம் முதல் ஆரம்பம்!

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கல்விகற்கும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு, இலவச உணவு வழங்கும் திட்டத்தை - அடுத்த வருடம் முதல் நடைமுறைப் படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கமைய 150 பாடசாலை நாட்களில் மாணவர்களுக்கு இயற்கை உணவுடன் கூடிய சோறு வழங்கப்படும். உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் ஐந்து மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மாணவர்களுக்கு, மதிய உணவுவழங்கும் திட்டத்தின் தொடர்சசியாகவே, வடக்கு - கிழக்கிலுள்ள 27 ஆயிரம் மாணவர்களுக்கு இலவச சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கென வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அரசாங்கம் 74 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஐக்கிய விளையாட்டுக் கழக ஆண்டுவிழா

(ஆழியவளை)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 44 ஆவது ஆண்டு விழாவும், அதனையொட்டிய விளையாட்டுப்போட்டியும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் பருத்தித்துறையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வையொட்டிப் பல விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - மரதனோட்டம், சைக்கிளோட்டம், கபடி, மல்யுத்தம், தலையணைச் சண்டை, மோட்டார் மெதுவாகச் செலுத்தும் போட்டி மற்றும் வீரதீரச் செயல்கள் என்பன இடம்பெறவுள்ளது.

## பருத்தித்துறை - கிளிநொச்சி பஸ்சேவை அதிகரிப்பு

(ஆழியவளை)

பருத்தித்துறையிலிருந்து தாளையடி ஊடாக கிளிநொச்சிவரை இரண்டு பஸ் சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

காலை 7.45 மணிக்குப் பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாக, கிளிநொச்சிவரை செல்லும் பஸ் - மாலையில் மீண்டும் பருத்தித்துறையை வந்தடைகின்றது. பகல் 2.00 மணிக்குப் பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பஸ்- தாளையடி, விசுமடு ஊடாகப் புதுக்குடியிருப்புவரை சென்று, அடுத்தநாள் 11 மணியளவில் பருத்தித்துறையைச் சென்றடைகின்றது.

முன்னர் ஒரு பஸ் சேவையே நடத்தப்பட்டுவந்தது. மேலும், ஒரு பஸ் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளதால், பயணிகள் நன்மையடைகின்றனர்.

## சமாதானத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி

(பாஷையூர்)

இலங்கைப் பாடசாலை உதைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் - இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனம் நடாத்தும் சமாதானத்திற்கான உதைப்பந் தாட்டப் போட்டி - எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை சென்பீற்றஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பரியோவான் கல்லூரி, பத்திரிசியார் கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, மன்னார் சென். சேவியர் கல்லூரி என்பன கலந்துகொள்ளவுள்ளன.

## சந்நிதியான் வாராந்த நிகழ்வு

(வடமராட்சிக் கிழக்கு)

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால், வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்படும் வாராந்த நிகழ்வில் - எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் 10.30 மணியளவில் "அமாவாசையில் பூரணை" என்னும் பொருள் பற்றி, சிவத்திரு வ.குமாரசுவாமி ஐயர் சொற்பொழிவு நிகழ்த்துவார். இதன் அறிமுக உரையை வே.தமர்மராசா வழங்கவுள்ளார். (17)

## நல்லைக்குமரன் வெளியீட்டு விழா

யாழ்.மாநகரசபையினரால் வருடாவருடம் வெளியிடப்படும் "நல்லைக் குமரன்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை - நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு - சைவப் பெரியார்கள் மற்றும் மாநகரசபை அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

## சுருவில் ஐயனார் முன்பள்ளி விளையாட்டுவிழா

சுருவில் ஐயனார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா- இன்று பிற்பகல் 3 மணியளவில் சுருவில் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்- ஏ.எக்ஸ்.செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## பட்டப்படிப்புக் கற்கை நெறிகள் ஆரம்பம்

தேசிய கல்வி நிறுவகத்தால், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடாத்தப்படும் பட்டப்பின்படிப்பு இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான கற்கைநெறி எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

முதலாம் வருடத்திற்கான புதிய அனுமதியைப் பெறுபவர்கள் - விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு, சிரேஷ்ட விரிவுரையாளர் கு.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

## கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு!

நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கையில்- சுகாதாரப் பிரிவும், பிரதேசசபையும் ஈடுபட்டுள்ளன.

இன்று - திருநெல்வேலி வடக்கு, பலாலி வீதி, ஆடியபாதம் வீதி, கலாசாலை வீதி, பாற்பண்ணை முருகன் வீதி ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

வளர்ப்பு நாய்களை - உரிய உரிமைத் தகடுகளைப் பெற்று, வீட்டில் கட்டிவைக்குமாறு நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (101)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : அ.திரிவேணி (சுருதி)
முகவரி: மொன்றியல், கனடா.

இரண்டாவது அகவையில்



பெயர் : த.கீர்த்திகா
முகவரி: "ராணி பவனம்" நவிண்டில்.

ஐந்தாவது அகவையில்



பெயர் : கு.டெனுஷா
முகவரி: நல்லாயன் வீதி, இளவாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------
பெற்றார் ஒப்பம்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

# கணினிக் கல்வியில் திறமையான

(சென்றவாரத் தொடர்ச்சி)

❖ACS

சர்வதேச தரத்தில் நடைபெறும் கணினிசார் பரீட்சையில் BSC இற்கு அடுத்தபடியாக பிரபல்யமாகக் காணப்படுவது ACS (Australian Computer Society) ஆகும்.

இந்தப் பரீட்சை பற்றிய விரிவான விளக்கத்தினை இங்கே பார்ப்போம்.

இப்பரீட்சையானது ஆறு வினாப்பத்திரங்களைக் கொண்டுள்ளது. அவையாவன -

1. $F_1T_1$ - Foundamental of Information Technology
2. $F_1T_2$ - Foundamental of Information Techology 2
3. Dcsa - Data communication and systems Architecture
4. PST - Programming and software Technology
5. SAD - System Analysis and Design
6. Dm - Data management.

இவற்றில் முதலிரண்டு வினாப்பத்திரங்களிற்குரிய பரீட்சையானது - $F_1T_1$, $F_1T_2$ இவற்றைக் கட்டாயமாகத் தோற்றிச் சித்தியடைதல்வேண்டும். இதன்மூலம் MACS (Member of Australian Computer Society) இல் அங்கத்துவத்தைப் பெற்று, ACS முடித்ததற்குரிய சான்றிதழினைப் பெறமுடியும்.

ACS பரீட்சையில் சித்தியடைந்த ஒருவர் - BCS பரீட்சையில் காணப்படும் Certificate என்ற முதலாவது பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை. ஏனைய மட்டங்களுக்குத் தோற்றினால் போதுமானதாகும். இதன்மூலம் BCS சான்றிதழைப் பெறமுடியும்.

ஒரே தடவையில் ஆகக்கூடியது மூன்று பாடங்களில் மட்டுமே தோற்றமுடியும். கூடுதலான பாடங்களிற்குத் தோற்ற வேண்டுமாயின், ACS இடமிருந்து எழுத்து மூல அனுமதியைப் பெறவேண்டும். எவ்வாறெனினும், இரண்டு ஆண்டிற்குள் இந்தப் பரீட்சை நான்கிலும் தோற்றிச் சித்தியடைதல் வேண்டும். இல்லாவிடின், மீள நான்கு பாடங்களுக்கும் தோற்றவேண்டும். இப்பரீட்சைகள் யாவும் மே, நவம்பர் மாதங்களில் நடைபெறுகின்றன.

ACS பரீட்சைக்குத் தோற்றவேண்டுமாயின், CSSL (Computer Society of Srilanka) என்ற அமைப்பில் அங்கத்தவராகச் சேருதல் வேண்டும். CSSL என்ற சங்கத்திடம் அங்கத்தவர் பணமாக இலங்கை ரூபாவில் 600 செலுத்தி அங்கத்தவராகச் சேரலாம். இதேபோன்று, பரீட்சைக் கட்டணத்தினையும் இந்த அமைப்பூடாக இலங்கை ரூபாவில் செலுத்துதல் இலகுவானதாகும். இந்த விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| ஒரு பாடங்களுக்கு | 3450/- |
| இரு பாடங்களுக்கு | 4350/- |
| மூன்று பாடங்களுக்கு | 5350/- |
| நான்கு பாடங்களுக்கு | 6350/- |

என வரையறுக்கப்பட்டுள்ளது.

எனவே, மாணவர்கள் ஒருதடவையில் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதைவிட, ஒரே தடவையில் இரண்டு அலலது மூன்று பாடங்களுக்குத் தோற்றுவதன்மூலம் செலுத்தும் பரீட்சைக் கட்டணத்தைக் குறைக்கமுடியும். இப்பரீட்சைகளை மாணவர்கள் சுயமாகப் படித்தோ, அல்லது தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று படித்தோ எழுதமுடியும்.

இதுவரையிலும் நாம் ACS இன் பரீட்சைக் கட்டணத்தினையும், பாட அல்குகள் பற்றியும் பார்த்த நாம், இனி வினாத்தாள் அமைப்பினை நோக்குவோம்.

### 1. Fundamental Information Technology

இது 70 பல்தேர்வு வினாக்கள். (F1T1), (MCQ) களையும் மற்றும் சுருக்கமாக விடையளிக்க வேண்டிய ஆறு வினாக்களையும் கொண்டுள்ளது. இந்த வினாக்களைப் படிப்பதற்கு 15 நிமிடமும், எழுதுவதற்கு 3 மணித்தியாலங்களும் கொடுக்கப்படுகின்றன. முதல் 70 பல்தேர்வு வினாக்களிற்கும் 70 மதிப்பெண்களும், மீதி வினாக்களுக்கு 30 மதிப்பெண்களும் வழங்கப்படும்.



### 2. Fundamental Information Technology 2 ($F_1T_2$)

இங்கு நான்கு வினாக்கள் காணப்படுகின்றன. இவை யாவற்றிற்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு

# சான்றிதழ்களைப் பெறுவது எப்படி?

வினாக்களிற்கும் குறைந்தது 50 வீதமான மதிப்பெண்களைப் பெற்வேண்டும். அதாவது, ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்களில் 12.5 மதிப்பெண்களிற்குக் குறையாது பெறவேண்டும்.

இந்த வினாத்தாளில் தரப்படும் நான்கு கட்டாய வினாக்களும், மீதியாகக் காணப்படும் நான்கு விருப்பத்திற்குரிய வினாத்தாள்களில் காணப்படும் வினாக்களையும் தழுவியதாகும். இந்த விருப்பத்திற்குரிய நான்கு வினாத்தாள்களான - DCSA, PST, SAD, DM போன்றவற்றை மையமாகக் கொணடே, $F_1T_2$ வினாத்தாள் காணப்படுகின்றது.

இனிநாம் விருப்பத்திற்குரிய நான்கு வினாத்தாள்கள் பற்றியும் பார்ப்போம்.

### 1. Data Communication and Systems Architecture (DCSA)

இதில் நான்கு வினாக்கள் உண்டு. இந்த நான்கு வினாக்களிறகும் கட்டாயமாக விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

### 2. Programming and software Technology (PST)

இவற்றில் ஆறு வினாக்கள் உண்டு. இவை அனைத்திற்கும் கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.

### 3. System Analysis and Design (SAD)

இவை இரண்டு பகுதிகள் கொண்டன. பகுதி A இல் இரண்டு வினாக்களில் ஒன்றிற்கும், பகுதி B இல் உள்ள ஐந்து வினாக்களில் நான்குக்கும் விடையளித்தல் வேண்டும். பகுதி A இற்கு 36 புள்ளிகளும், பகுதி B இற்கு 64 புள்ளிகளும் வழங்கப்படும்.

### 4. Data Management (DM)

இதில் ஏழு வினாக்கள் உண்டு. இதில் ஐந்திற்கு மட்டும் விடையளித்தல் போதுமானது.

ACS ஐப் பொறுத்தவரை - எல்லா வினாத்தாள்களிலும் குறைந்தது 50% புள்ளிகள் பெற்றால் மட்டுமே சித்தியடைந்தவராகக் கருதப்படுவர். நீங்கள் பல்கலைக்கழகப் பட்டதாரி என்பதோடு, கணினிசார் பாட அலகுகளைக் கற்றிருந்தால், $F_1T_1$, $F_1T_2$ போன்ற பரீட்சைகள் எழுதவேண்டியதில்லை. இதற்கு நீங்கள் - உங்கள் தகைமைகள் அடங்கிய ஆவணங்களை அனுப்பி, உரிய Exemption பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், இது பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு, WWW.acs.org.au என்ற இணையத்தளத்தினை Down load செய்து கொள்ளுங்கள் அல்லது infor @ acs.org.au என்ற மின்னஞ்சல் முகவரியை நாடவும். இணைய வசதிகள் அற்றவர்கள், பின்வரும் அஞ்சல் முகவரி ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

I. Australian computer society inc Level 3
160, Clarence street,
Sydney NSW 2000,
AUSTRALIA.
P.O. Box 9534

அல்லது

II. COMPUTER SOCIETY OF SRI LANKA
No: 275 / 75, Bauddhaloka Mawatha
Colombo - 07

T.P 508009 தொடர்பு கொள்ளவும்.

இதுவரை நேரமும் நாம் சர்வதேசரீதியில் (International Level Exam) நடாத்தப்படும் பரீட்சையும், அதற்கான சான்றிதழ் பற்றியுமே ஆராய்ந்தோம். ஆனால் இனி நாம் பார்க்க இருக்கும் விடயமானது தேசிய ரீதியில் (National Level Exam) அங்கீகரிக்கப்பட்ட (எமது நாட்டில்) பரீட்சைகள் பற்றியும் ஆராய இருக்கின்றோம்.

தகவல் தொழிநுட்பத்துறையில் இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைப்பெற SLIIT (SRI LANKAN INSTITUTE INFORMATION TECHNOLOGY) என்ற அமைப்புப் பரீட்சைகளை நடாத்தி வருகின்றது. இந்த நிறுவனத்தினது உருவாக்கம் - உயர் கல்வி அமைச்சு, உள்நாட்டு சர்வதேச வாணிப அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுகளின் கூட்டு முயற்சியினால் உருவாகிய நிறுவனமாகும். இங்கு மாணவர்கள் இணைந்து கற்பதன்மூலம், தகவல் தொழிநுட்பவியலில் விஞ்ஞானமாணி BSC (Bachelor of Science in information Technology) பட்டத்தைப் பெறமுடியும்.

இக்கற்கை நெறியினைப் பயில விரும்பும் மாணவர்கள் - ஏதாவது ஒரு துறையல் G.C.E. A/L இல் பரட்சையில் இலங்கை அல்லது லண்டன் அமர்வில் மூன்று பாடங்களில் (ஓரே அமர்வில்) சித்தியடைந்தவராக இருப்பதுடன், SIIT ஆல் நடாத்தப்படும் உளச்சார்பு (APTITUDE) பரீட்சையிலும் சித்தியடையும் மாணவர்களே, கற்கை நெறிக்குத் தெரிவுசெய்யப்படுவர்.

நான்கு வருடங்களைக் கொண்ட இந்தக் கற்கைநெறியில் ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டு அரையாண்டு (Semester) பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு அரையாண்டிலும் 20 அலகுகளைக் கொண்ட பாடத்திட்டம் காணப்படுகின்றது.

(தொடரும்...)

சேனாதிராசா ஜெயானந்தன்
இடைவரவு விரிவுரையாளர் (computer)
யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | யுனிசெப் UNICEF | யுனிசெப் UNICEF | கனேடிய உலக பல்கலைக்கழக சேவைகள் (WUSC) |
|---|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | உதவி சிறுவர் பதுகாப்பு அலுவலர்<br>01 - வெற்றிடம் | 1. உதவித் திட்ட அலுவலர்<br>வெற்றிடம் - 02<br>யாழ்ப்பாணம், வவுனியா<br>2. திட்ட அலுவலர் கண்ணிவெடி சார்ந்த கல்வி.<br>வெற்றிடம் - 04<br>யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி.<br>3. வாகன சாரதி<br>வெற்றிடம் - 05<br>மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி. | 1. தகவல் தொழிநுட்ப அலுவலர் (ITA)<br>வெற்றிடம் - 03<br>பதுளை, வவுனியா, மட்டக்களப்பு.<br>2. வாகன சாரதி<br>வவுனியா. |
| அடிப்படைத் தகுதி | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் கல்வி, மனித உரிமை தொடர்பான சட்டம், உளவியல், சமூகவேலை அல்லது இவை சார்ந்த ஏதாவது ஒரு துறையில் பட்டம்.<br>2. ஆங்கிலத்தில் புலமை | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் சமூகவிஞ்ஞான அல்லது அவை சார்ந்த ஏதாவது ஒரு துறையில் பட்டம்.<br>2. G.C.E. (A/L) வர்த்தகம், கணக்கியலில் விசேட சித்தி. மனிதநேய அல்லது கண்ணிவெடி அகற்றல் தொடர்பான தொழில்நுட்ப அனுபவம். 5-6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.<br>3. 5 வருட அனுபவம் O/L ஆங்கிலத்தில் சித்தி. | 1. G.C.E. (A/L) உடன், கணினிக் கல்வி சார்ந்த டிப்ளோமா<br>அல்லது<br>கணினி வன்பொருள் பாவனை பற்றிய அறிவு,<br>ஆங்கிலப் புலமை,<br>3 வருட அனுபவம்.<br>2. விபத்துக் குற்றமிழைக்காத வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம்.<br>5 வருட அனுபவம். |
| விண்ணப்ப முடிவு திகதி | 16.08.2003 | 22.08.2003 | 22.08.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# மூலப்பொருள் செலவு அதிகரிப்பால்

**மீன் மற்றும் இறால் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த சிலரிடம், அவர்களின் தொழிலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாகத் தொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு - அவர்கள் அளித்த பதில் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.**

**மன்னார் அன்ரனி**

**குருநகர்**

25 வருடங்களுக்கு மேலாக நான் இறால் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபடுகின்றேன்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டு - எமக்குச் சந்தைப்படுத்தும் வசதி வந்து சேர்ந்தபோதும், இப்பாதையால் இரவு நேரப் போக்குவரத்து இன்மையால் சில அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.



மன்னார் அன்ரனி

எமது உற்பத்திப் பொருட்களை உரிய முறையில் சந்தைப்படுத்த முடியாத சிக்கல்நிலை ஒன்றுள்ளது.

தற்போது உப்பு, மீன் போன்ற மூலப்பொருட்களுக்கான செலவு அதிகமாதலால், அதிக இலாபத்தை அத்தொழிலால் அடையமுடியாதநிலையுண்டு.

25 வருடங்களுக்கு முன்னர் எமக்குக் கிடைக்கும் மீனின் அளவு அதிகமாகவும், விலை குறைவாகவும் இருந்தது. அப்போதும் எம்மால் போதிய இலாபத்தைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை. அதேபோல, தற்போது பிடிபடும் மீனின் அளவுகுறைந்துவிட்டது. இதனால், இப்போதும் எம்மால் போதிய இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கின்றது.

கிழமையில் மூன்று நாட்கள்தான் எமது மீனவர்கள், ஆழ்கடல் மீன்பிடியை மேற்கொள்கின்றனர். இதனால், கடற்தொழிலாளர்களே பாதிக்கப்படுகின்றனர்.

சிலவேளைகளில், கடலிலே மீன்களே கிடையாது போகும் நிலையும் ஏற்படுவதுண்டு.

இந்திய ட்றோலர்கள் எமது பிரதேசத்திற்குள் அத்துமீறுவதைத் தடுப்பதற்குச் சட்டங்கள், உடன்படிக்கைகள் இருந்தும் அவற்றை யாரும் கவனத்தில் எடுப்பதாக இல்லை. இதுவே எமது தற்போதைய முக்கிய பிரச்சினையாகவுள்ளது.

**நீற்றம்மா**

**குருநகர்**

நான் ஒன்பது வருடமாக இந்தத் தொழிலைச் செய்து வருகின்றேன். முன்னர் கடற்தொழிலை மேற்கொண்டு வந்தேன்.



நீற்றம்மா

இராணுவத்தின் கெடுபிடிகள் தற்போது முன்னரைவிடக் குறைவாக உள்ளன என்றே கூற வேண்டும். ஆனாலும், அடையாள அட்டை, பாஸ் நடைமுறை என்பவற்றால், சிறிது கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இந்தத் தொழிலின் மூலம் எமக்குப் போதிய வருமானம் கிடைப்பதில்லை. ஆனாலும், முன்னரைவிட இப்போது ஒரு கிலோ கருவாட்டின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது. உற்பத்திக்கான மூலப்பொருட்களின் செலவு, கூலியாட்களுக்குக்கான செலவு என்பவற்றால், எமக்குக் கிடைக்கும் இலாபம் வெகு குறைவாகவே உள்ளது.

இருந்தபோதும், மீனவர்கள் எமக்கு மீன்களை விற்கும்போது, விலையில் கொஞ்சம் குறைத்துத் தருவார்கள். எமக்கு அது நன்மையைத் தந்தாலும், மீனவர்களைப் பொறுத்தவரையில் அப்படித் தொடர்ந்தும் தரமுடியாதநிலை உள்ளது.

ஏலத்தில் தான் மீன்கள் விற்கப்படுகின்றன. பிற இடத்து



இறால் பதனிடும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களைப் படத்தில் காணலாம்.

வியாபாரிகள் - மீன்களைக் கூடிய விலைக்கு வாங்க முயற்சிப்பார்கள். இந்தநிலையில் மீனவர்கள் எமக்கு மீனின்

# அதிக இலாபம் கிடைப்பதில்லை!

விலையைக் குறைத்துத் தரும்போது, அவர்கள் நட்டமடைய நேரிடலாம்.

தற்போது, பாதை திறப்பின் காரணத்தால் - எமக்கு உள்ளூர் வியாபாரம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதற்காக வந்துபோகும் மக்கள், தமது உற்பத்தியை அதிகளவில் வாங்கிச் செல்கின்றார்கள்.

போர் தீவிரமடைவதற்கு முன்னர் - இரவுவேளைகளில் வெளி இடங்களில் இருந்து வந்து லொறிகள் காத்து நிற்கும். அப்போது எமது பொருட்களை வெளி இடங்களுக்கு அனுப்புவது இலகுவாக இருந்தது. இந்த நிலைமை இப்போது இல்லை என்பது பிரச்சினையாகவே உள்ளது.

எமக்கு நீர் கிடைப்பது பெரும் பிரச்சினையாகவே உள்ளது. கருவாட்டை நாம் எமக்கு அருகிலுள்ள சிறிய கடற்பகுதியிலேயே கழுவி வந்தோம். இப்போது, அந்தப் பிரதேசம் படையினரால் கல், மண் கொண்டு மூடப்பட்டுள்ளது. இதனால், தூர இடங்களிலிருந்து கிணற்றுநீரைக் கொண்டு வந்தே கருவாடுகளைக் கழுவவேண்டியுள்ளது.

பெரிய அளவிலான கடற்தொழிலைச் செய்வதற்கு எம்மிடம் போதிய நிதி வசதிகள் இல்லை.

அவ்வாறான தொழில் செய்வதற்கு எமக்கு ஆர்வம் நிறையவே உண்டு. அதற்கு பல இலட்சக்கணக்கில் பணம் தேவையாகியுள்ளது.

**செபஸ்ரியன் அன்ரனி**

**குருநகர்**

நான் இறாலை அவித்துப் பதப்படுத்தும் தொழிலை மேற்கொள்கின்றேன். முன்னர் படகுகள் வைத்துக் கடற்தொழில் செய்துவந் தோம். போரின் காரண மாக எமது உபகரணங் கள் அழிவடைந்தமை யால், இந்தத் தொழிலை மேற்கொள்கின்றேன்.

கடலில் சென்று தொழில் செய்வதைவிட, தற்போது இந்தத் தொழில் இலகுவான தாகவுள்ளது. கடலில் ஏற்படுகின்ற அனர்த்தங்களால், எமது முழுச் சொத்தையும் இழக்க வேண்டிய நிலைமை உண்டு.



செபஸ்ரியன் அன்ரனி

ஆனால், இந்த இறால் அவித்துப்பதப்படுத்தும் தொழிலில் ஒருநாள் கொள்வனவையே இழக்கவேண்டி ஏற்படும். எனவே, நாம் செய்யும் இந்தத் தொழிலில் பெரும் நட்டங்களை எதிர்நோக்குவது குறைவு என்ற காரணத்தால், எமக்கு இந்தத் தொழிலில் ஈடுபாடும், தொடர்ந்து செய்யவேண்டும் என்ற விருப்பமும் ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சமாதானச் சூழலில் பிற இடங்களுக்குப் பொருட்களை அனுப்பக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. இதனால், இறாலைப் பச்சையாகவே அனுப்புக்கின்றோம். சமாதானச் சூழலுக்கு முன்னர் நாம் வெளியிடங்களுக்கு இறாலை அனுப்புவதாக இருந்தால், அவித்துப் பதப்படுத்துவது அவசியமாக இருந்தது.

ஏ-9 வீதி போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர்-சுதந்திரமாகத் தொழிலைச் செய்து, இலாபம் ஈட்டக்கூடிய நிலை தோன்றியுள்ளது. முன்னர் இந்தத் தொழிலில் எமக்குச் சந்தைப்படுத்தல் என்ற பிரச்சினை துன்பத்தைக் கொடுத்தது. தற்போது அது ஓரளவு தீர்ந்து விட்டதாகவே கருதுகின்றேன்.

ஆனாலும், கொழும்புக்குப் பொருட்களை அனுப்பும்போது, சில சந்தர்ப்பங்களில் நிறைகளைக் குறைத்துக் கணக்கிட்டு, பணத்தை அனுப்புவார்கள். இந்த வகையில், சில சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியவர்களாகவும் உள்ளோம்.

இந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்வது - செய்ய வேண்டும் என்ற உறுதியோடும், நட்டம் வந்தாலும் அதைச் சீர்செய்து, வெற்றிபெறவேண்டும் என்ற வைராக்கியத்தோடும் நாம் முதலில் - தொழிலை ஆரம்பிக்கும்போது, நினைத்ததால், இன்று ஓரளவு நன்நிலையில் தொழிலைச் செய்யக் கூடியதாகவுள்ளது.

தற்போது சந்தைப்படுத்தலில் வசதிகள் அதிகமாகக் கிடைப்பதனால், விற்பனையை ஓரளவு அதிகரித்துள்ளோம். பதப்படுத்தப்படாத இறாலின் விலை ஒரு கிலோ 80 ரூபாவிலிருந்து, 160 ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்த நிலைமை எமக்கு மகிழ்ச்சியாகவேயுள்ளது.

எமது பிரதேசத்தில் வாழ்கின்ற இளைஞர்கள் கடற்தொழிலில் அதிக நாட்டம் உடையவர்கள். திறமையும், கடல் பற்றிய அனுபவ அறிவும் உடையவர்கள். அவர்களின் ஆற்றலை வளர்த்து - வசதிகளை அதிகப்படுத்திக் கொடுத்



தால், எமது பிரதேசத்தின் அபிவிருத்தியை இலகுவாகிவிடும்.

முன்னர் உப்பு எமது குடாநாட்டை விட்டு வெளியே செல்லாமையால், விலை குறைவாக இருந்தது. இப்போது ஏற்றுமதியாவதால், விலை உயர்வாகவுள்ளது. எமது இறால் பதனிடும் தொழிலைப் பொறுத்தளவில் -

இந்திய மீன்பிடி ட்றோலர்கள் ஏற்படுத்தும் பாதிப்புக் குறைவு என்றே கூறலாம்.

ஆழ்கடலில் மீன்பிடியை மேற்கொள்பவர்களும், கருவாடு பதனிடும் தொழிலாளர்களுமே இந்திய ட்றோலர்களினால் அதிகம் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

எமக்குப் பாதிப்பில்லை என்பதற்காகச் சும்மா இருந்துவிடமுடியாது. இது தடுக்கப்படவேண்டும்.

எமது வளத்தை - இன்னொருவன் அள்ளிச்செல்ல அனுமதியளிக்கக்கூடாது.

கடற்பொருட்கள் ஏற்றுமதியில் வடபகுதிதான் முதலிடம் வகிக்கின்றது. அதிலும் குருநகருக்கு முக்கிய பங்குண்டு. எனவே, எமது வளம் சுரண்டப்படாதும், கவர்ந்து செல்லப்படாதும் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எமது தொழிலில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டால், மேலும் உற்பத்திகளைக் கூட்டுவதற்கு வாய்ப்பு நிறையவே உண்டு. உதாரணமாக - புத்தளம் பகுதியில் செயற்கையாக இறால் வளர்ப்பை மேற்கொள்ளும் திட்டமுள்ளது.

அதேபோன்று வாய்ப்பும், வசதியும் எமக்குக் கிடைக்குமாக இருந்தால், நாம் அதிகம் மகிழ்ச்சியடைவோம்.

**சந்திப்பு:**
**மதன், சர்வேஸ்.**




| பொருட்கள் | சங்கானை | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 20/= | 40/= | 20/= | 60/= | 20/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 65/= | 70/= | 70/= | 65/= | 70/= | 70/= |
| கத்தரிக்காய் | 40/= | 40/= | 40/= | 40/= | 40/= | 30/= | 50/= |
| பாகற்காய் | 30/= | 30/= | 30/= | 30/= | 40/= | 25/= | 50/= |
| வெண்டிக்காய் | 15/= | 10/= | 20/= | 30/= | 20/= | 10/= | 15/= |
| கரட் | 40/= | 40/= | 40/= | 50/= | 70/= | 50/= | 50/= |
| பீற்றூட் | 15/= | 15/= | 20/= | 20/= | 20/= | 10/= | 20/= |
| முருங்கைக்காய் | 70/= | 80/= | 70/= | 60/= | 80/= | 80/= | 80/= |
| வெங்காயம் | 20/= | 20/= | 25/= | 30/= | 25/= | 25/= | 18/= |
| பச்சை மிளகாய் | 50/= | 100/= | 60/= | 80/= | 80/= | 70/= | 70/= |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.*
- தமிழ்பழமொழி

## நமது நோக்கு

### பேரினவாதத்துக்கே துணை

வட - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமடைந்திருக்கின்ற அதே வேளை, இதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளும் நாளுக்கு நாள் புதுவேகம் பெற்றுவருகின்றன.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள் அடங்கிய திட்டவரைபினை - புலிகள் ஆராய்ந்து, அதற்கு மாற்றீடான தீர்வுயோசனைகளை முன்வைப்பதற்கான முயற்சியில் புலிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து ஆராய்வதற்காக, புலிகளின் அரசியல் விவகாரக்குழு - பிரான்ஸின் தலைநகர் பாரீஸில் கூடி ஆராயவுள்ளது. இதற்கான பயணத்தை வன்னியிலிருந்து புலிகளின் குழுவொன்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் பிரான்ஸ் செல்லவுள்ளது.

இது - இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமானதும், ஆரோக்கியமானதுமான செயற்பாடுகளின் ஒரு பக்கமாகும்.

ஆனால், இதற்கு மறுபக்கம் ஆபத்தானதும், அபாயகரமானதுமான விளைவுகளுடன் கூடியதாகவும் அமைந்திருக்கின்றது. இடைக்கால நிர்வாகத்திட்ட யோசனைகளுக்கு இப்போது இரண்டு தரப்புக்களில் இருந்து கிளம்பியிருக்கும் வெவ்வேறு கோணங்களின் அடிப்படையிலான எதிர்ப்புகளை இவ்வாறு குறிப்பிடலாம்.

முதலாவது தரப்பு - எப்போதுமே தமிழ்மக்களை அடக்கியாளவேண்டும் என்று, சதா கனவு கண்டுகொண்டிருக்கும் சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள்.

இரண்டாவது, வடக்கு - கிழக்கில் தமிழ்மக்களுடன் இணைந்து வாழும் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதிகளில் ஒருசாராரிடம் இருந்து கிளம்பியுள்ள எதிர்ப்பு என இரு பிரிவுகளாக வரையறுக்கலாம்.

சிங்கள - பௌத்த பேரினவாதசக்திகளிடமிருந்து, தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்பட்ட சமயங்களில் எல்லாம் எப்படியான எதிர்ப்புகள் கிளம்பினவோ, அதேபோன்ற எதிர்ப்புகள் இப்போதும் கிளம்பியுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி இந்த திட்டவரைபுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற போதும்- இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்குத் தலைமை தாங்கும் அளவுக்கு அது நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், பொ.ஐ.முவுடன் அரசியல் கூட்டணி ஒன்றை அமைக்கத் தயாராகும் ஜே.வி.பிதான் இப்போது இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கி வருகின்றது. ஜே.வி.பியினர் பத்துநாள் பிரசார நடவடிக்கையினை மேற்கொண்டு, நாடு முழுவதும் தீவிரமான பிரசாரங்களை முன்னெடுத்துவருகின்றனர்.

நேற்றுமுன்தினம், கம்பல் பூங்காவில் ஜே.வி.பி நடத்திய கறுப்புக்கொடி ஊர்வலம் முற்றிலும் - இடைக்கால நிர்வாகம் அமைக்கும் செயற்பாட்டை இடைநிறுத்து என்ற தொனிப் பொருளிலேயே இடம்பெற்றது.

ஜே.வி.பியினர் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவது ஒன்றும் புதிதான விடயமல்ல. ஆனால், ஜே.வி.பி தான் சிங்கள தேசியவாதத்திற்குத் தலைமையேற்கத் தொடங்கியிருப்பது - மறுபுறத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மறைமுக நடவடிக்கையாகவே கருதப்படுகிறது.

இதேநேரத்தில், ஜே.வி.பியுடன் இணைகரம் கோர்த்துள்ள தேசிய பிக்குகள் முன்னணியின் எதிர்ப்பு நடவடிக்கைகளும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவையாகும்.

சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளிடம் இருந்தான இத்தகைய செயற்பாடுகள் ஒருபுறமிருக்க-

வடக்கு - கிழக்கில் தமிழ்மக்களுடன் இணைந்து வாழும் முஸ்லிம்களிடம் இருந்து கிளம்பியுள்ள எதிர்நடவடிக்கைகள் தான் விநோதமானதாக அமைந்திருப்பதுடன், அவர்களின் விவேகமற்ற அரசியற் செயற்பாட்டையும் எடுத்துக்காட்டியுள்ளது.

புலிகளுக்கு, வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதாயின், முஸ்லிம் பகுதிகளைத் தனியாகப் பிரித்து தனியான நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று, முஸ்லிம்கள் தரப்பு பிரதிநிதிகள் சிலரிடம் இருந்து கோரிக்கை எழுந்திருக்கிறது.

இத்தகைய கோரிக்கைகளுக்கு அடிப்படையாக - முஸ்லிம்களுக்கான தனியலகுக் கோரிக்கை அமைந்திருக்கிறது. பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் தொடர்ச்சியாகவே தனியான இடைக்கால நிர்வாகக் கோரிக்கையும் எழுந்திருக்கின்றது.

அதேவேளை - முஸ்லிம்கள் தரப்பில் இருந்து வரும் மிரட்டல்கள், எச்சரிக்கைகளும் இங்கே கவனத்தில் கொள்ளப்படவேண்டியவையாக இருக்கின்றன. வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தைத் துண்டாடவேண்டும் என்ற வாதம் ஒருபுறம், தனியான இடைக்கால நிர்வாக அலகு என்ற கோரிக்கை இன்னொரு புறமுமாக நீடித்துச் செல்கிறது.

இப்போது தமக்கு தனியான அலகு தராவிட்டால் அடுத்த பத்தாண்டுகளில் முஸ்லிம் பிரபாகரன் உருவாவார் என்ற எச்சரிக்கை வேறு விடுக்கப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் எதைக்காட்டுகிறது என்றால், தமிழருடன் இணைந்து வாழ முஸ்லிம்களால் முடியாது என்றா? அல்லது விரும்பவில்லை என்பதையா? இரண்டறக் கலந்துவிட்ட இரு இனங்களின் நல்வாழ்வுக்கான இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு மூலமாக தீர்வுகளைக் காண்பதற்கான வழிமுறைகள் உருவாகியுள்ளபோது - இடையில் புகுந்து குழப்பும் செயற்பாடுகளை முன்னெடுப்பது ஆரோக்கியமான அரசியலாக அமையாது.

இது சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்கு உதவமாட்டாது. பேரினவாத சக்திகளுக்கு துணைநிற்பதாய் முடியும்.

## நெடுங்கேணி வைத்தியசாலையில்

# கட்டடம் மீளத் திருத்தப்பட்டபோதும் பாவனைக்கு திறக்கப்படவில்லை!

(நெடுங்கேணி)

நெடுங்கேணி அரசினர் மருத்துவமனையில் திருத்தி அமைக்கப்பட்ட கட்டடம் திறந்து வைக்கப்படாததால், மக்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை காரணமாக - இடம் பெயர்ந்த இநத மருத்துவமனை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள போதிலும், வசதி குறைவான கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகிறது.

சேதமடைந்த மருத்துவமனை திருத்தி அமைக்கப்பட்ட போதிலும், நீர்வசதி செய்து கொடுக்கப்படாமையால், அதில் இயங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பழுதடைந்த நீர்த்தொட்டி இப்போது புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, நிரந்தர வைத்தியர், தாதியர் நியமிக்கப்படவில்லை. இங்கு வரும் அவசர நோயாளர்கள், மகப்பேற்றுத் தாய்மார்கள் வவுனியா, புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

(17)

## முத்தையன்கட்டுப் பகுதிக்கு பஸ்சேவை ஆரம்பிக்கவில்லை!

### பொதுமக்கள் பெரும் சிரமம்

முத்தையன்கட்டுப்பகுதிக்குப் பயணிகள் பஸ் சேவை நடத்தப்படாமையால், புதுக்குடியிருப்பு வைத்தியாசலைக்குச் சென்று திரும்பும் நோயாளிகள் - நான்கு, ஐந்து கிலோமீற்றர் தூரம் நடந்தே செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இப்பகுதியிலுள்ள பாதையை முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், பொதுமக்களும் இணைந்து புனரமைப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட சங்கம்!

### அங்குரார்ப்பணக் கூட்டம்

(வடமராட்சி)

கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட சங்கம் (கிரிக்கெட்) சங்க அங்குராப்பண கூட்டம் - எதிர்வரும் 28 ஆம் திகதி கிளி. மாவட்ட விளையாட்டு அதிகாரி தலைமையில் நடைபெறவுள்ளது.

வன்னி விளையாட்டுத்துறை மண்டபத்தில் 28 ஆம் திகதி பி.ப. 4மணிக்கு நடைபெறவுள்ள கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் அனைத்தையும் கலந்து கொள்ளுமாறு, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி கேட்டுள்ளார்.

# வயோதிபரை மோதிவிட்டு மறைந்த ஹையேஸ் மடக்கிப் பிடிக்கப்பட்டது!

### கிளிநொச்சி காவல்துறை நடவடிக்கை

(கிளிநொச்சி)

வயோதிபர் ஒருவரை முட்டிமோதிவிட்டு நிறுத்தாது சென்ற ஹையேஸ் வாகனம் ஒன்றினை, தமிழீழக் காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் விரட்டிச் சென்று, மடக்கிப் பிடித்துக் காவல் பணிமனைக்குக் கொண்டுவந்தனர்.

கடந்த திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் முறிகண்டி ஆலயத்தில் வயோதிபர் ஒருவர் வழிபாடு முடித்துவிட்டுப் புறப்படுகையில், ஹையேஸ் வாகனம் மோதிவிட்டு நில்லாது சென்றுள்ளது.

முகத்தில் காயங்களுடன் மேற்படி வயோதிபர் கிளிநொச்சி காவல்பணிமனைக்குச் சென்று முறையிட்டதைத் தொடர்ந்து, தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பொறுப்பதிகாரி விரைந்து சென்று, உமையாள்புரத்தில் வைத்து - சம்பந்தப்பட்ட ஹையேஸ் வாகனத்தையும், சாரதியையும் பிடித்துவந்து, விசாரணைகளை நடத்தினார்.

காயமுற்ற வயோதிபருக்கு, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## சித்திரக்கலை வழிகாட்டுகை வகுப்புக்களுக்கு ஏற்பாடு!

### விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரத்தில், சித்திரக்கலையைக் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கான விசேட சித்திரக்கலை வழிகாட்டுகை வகுப்புக்களை வாராந்தம் நடாத்துவதற்கு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி நுண்கலைத்துறையினர் உத்தேசித்துள்ளனர்.

இந்த வழிகாட்டுகை வகுப்புக்களில் கலந்துகொண்டு பயன பெற விரும்பும் மாணவர்கள் - 'நுண்கலைத்துறை, யாழ்பபாணம் தேசிய கல்வியியற்கல்லூரி கோப்பாய்' என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளும் வகையில், சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை - எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைக்கும்படி,

யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி கலாநிதி கமலநாதன் கேட்டுள்ளார்.

## கிளிநொச்சி மருத்துவமனையில் உளவளத்துறை திறந்து வைப்பு!

(வடமராட்சி)

கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்தில் உளவளத்துறைப் பிரிவு ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

மருத்துவ அதிகாரி கலாநிதி ச.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரினை கிளிநொச்சி பிரதி சுகாதார சேவைப்பணிப்பாளர் சத்தியமூர்த்தி, கியுடெக் திட்ட இணைப்பாளர் அருட்தந்தை நோபின் ஆகியோர் ஏற்றிவைக்க, கட்டடத்தை யுனிசெப் நிறுவனப் பிரதிநிதி பெனி புறூம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

## போலியான குடிவரவு முத்திரையை வைத்திருந்த இளைஞர் கைதானார்!

(கொழும்பு)

போலியான இலங்கைக் குடிவரவு முத்திரைகளை வைத்திருந்த 17 வயது இளைஞர் ஒருவரை சிங்கப்பூர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்த இளைஞர் போலியான இலங்கை குடிவரவு முத்திரைகளைப் வெளிநாடு செல்வோருக்குப் பயன்படுத்தி வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், இந்த இலங்கையருக்கு 7 வருடச் சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்படுமென பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கரவெட்டி - வேரக்களிக்குளத்தை உலகவங்கி அதிகாரிகள் பார்வை

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுவரும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள வேரக்களிக்குளத்தை- யாழ்.வந்த உலக வங்கியின் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

நியாப் திட்டத்தின் கீழ்- இக்குளத்தை நீர்ப்பாசனத் திணைகளம் புனரமைத்து வருகின்றது. இதனைப் பார்வையிடுவதற்காகவே உலக வங்கியின், அதிகாரிகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள பல குளங்கள் உலக வங்கி நியாப் திட்டத்தின் கீழ் புனரமைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## விசேட பொலிஸ் குழுவின் செயற்பாடுகள் வெற்றியாம்!

(கொழும்பு)

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட விசேட பொலிஸ் குழுவின் செயற்பாடுகள் மூலம், கொழும்பில் குற்றச்செயல்களைக் கணிசமாகக் குறைத்துக் கொள்ள முடிந்துள்ளதாக, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் அவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் ஜோன் அமரதுங்க அங்கு மேலும் தெரிவித்ததாவது

இராணுவத்திலிருந்து தப்பியோடியோர்தான் குற்றச்செயல்களுடன் அதிகளவில் தொடர்புபட்டுள்ளனர். இந்தக் குற்றச்செயல்களை முற்றாக கட்டுப்படுத்த விசேட பொலிஸ் பிரிவின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சீனா-இலங்கை விமானப் பயணம் நவம்பர் மாதம் முதல் ஆரம்பம்!

சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையில் நேரடி விமானப் போக்குவரத்தை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்தவருடம் நவம்பர் மாதம் முதல் இரு நாடுகளுக்குமிடையிலான நேரடி விமானப்போக்குவரத்து ஆரம்பமாகும். இதன்மூலம், சுற்றுலாப் பயணிகளின் வரவை அதிகரிக்க முடியுமென்று அரசாங்க வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்த விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பான ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக, இரு நாட்டு சுற்றுலாத்துறை அதிகாரிகளும் பேச்சுக்களை தொடர்ந்து நடத்திவருகின்றனர்.

# Z - புள்ளியிடல் முறை

## ஓர் கண்ணோட்டம்

தற்போதைய கல்வி முறையில் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யும் முறையாக - Z புள்ளிமுறை பயன்படுத்தப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இத்தெரிவுமுறை ஏற்கனவே பல நாடுகளில் நடைமுறையிலுள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரை- இம்முறை பொருத்தமற்றது என ஒரு சாராரும், பொருத்தமானது என ஒரு சாராரும் பலதரப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே, இந்த Z புள்ளி பற்றிய ஓர் கணணோட்டத்தை எடுத்து நோக்குவோமாயின், முதலில் Z புள்ளி என்றால் என்ன? இது எவ்வாறு கணிக்கப்படுகிறது? இதன்மூலம் மாணவர்கள் எப்படியான நன்மைகளைப் பெறுகின்றனர்? எவ்வாறான பாதிப்பை அடைகின்றனர்? என்பது பற்றிய ஓர் விளக்கத்தை ஆராய்தல் இன்றியமையாததொன்றாகும்.

### இடைப்புள்ளி ($\bar{X}$)

இடைப்புள்ளி என்பது மொத்தப்புள்ளிகளின் சராசரியாகும்.

$$\bar{X} = \frac{\text{புள்ளிகளின் கூட்டுத்தொகை}}{\text{புள்ளிகளின் எண்ணிக்கை}}$$

உதாரணம் - 40, 84, 65, 66, 90 என்னும் புளளிகளின் இடைப்புள்ளி X ஆனது பின்வருமாறு கணிக்கப்படும்.

$$\bar{X} = \frac{40+84+65+66+90}{3}$$

$\therefore X = 69$

$\therefore$ இடைப்புள்ளி = 69 ஆகும்.

### நியமவிலகல் ($\sigma$)

நியம விலகல் என்பது - ஒவ்வொரு ஈட்டும் இடைப்புள்ளியிலிருந்து சராசரியாக விலகியிருக்கும் அளவாகும்.

நியமவிலகலானது பின்வரும் சமன்பாட்டின்மூலம் கணிக்கப்படுகிறது.

$$\sigma = \sqrt{\frac{\Sigma (X-\bar{X})^2}{\Sigma f}}$$

உதாரணம் -

40, 84, 65, 66, 90 என்னும் புள்ளிகளின் நியமவிலகல் σ ஆனது பின்வருமாறு கணிக்கலாம்.

$$\sigma = \sqrt{\frac{(40-69)^2+(65-69)^2+(66-69)^2+(84-69)^2+(90-69)^2}{5}}$$

$$= \sqrt{\frac{841+16+9+225+441}{5}}$$

$$= 17.5043$$

$\therefore$ நியமவிலகல் = 17.5043 ஆகும்.

எனவே, எந்த ஓர் புள்ளித் தொடைகள் தரப்படுமிடத்தும் அவற்றுக்கான இடை $\bar{X}$ நியமவிலகல் σ என்பன கணிக்கமுடியும்.

### Z புள்ளி

மூலப்புள்ளிகளின் தொடையிலுள்ள ஓர் புள்ளியின் Z புள்ளி என்பது, அப்புள்ளியின் இடையிலிருந்தான அதிகரிப்பின் நியமவிலகலின் மடங்காகும்.

எனவே,

Z புள்ளியானது பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிக்கப்படுகிறது.

$$\bullet = \frac{(X-\bar{X})}{\sigma}$$

இங்கு

X என்பது புள்ளிகளின் இடையாகும்.

σ என்பது புள்ளிகளின் நியமவிலகலாகும்.

X என்பது Z புள்ளி காணவேண்டிய புள்ளியாகும்.

உதாரணம் -

40, 84, 65, 66, 90 என்னும் ஒரு தொடைப் புள்ளிகளை நோக்கும்போது, 84 என்னும் புள்ளியின் Z புள்ளியைக் காண்போம்.

முன்னைய உதாரணங்களிலிருந்து

$\bar{X} = 69$

$\sigma = 17.5043$ ஆகும்.

$$\therefore Z = \frac{(X-\bar{X})}{\sigma} = \frac{84-69}{17.5043} = 0.8569$$

$\therefore$ இத்தொகுதியில் 84 என்னும் புள்ளியின் Z புள்ளி 0.8569 ஆகும்.

எனவே, ஒவ்வொரு பாடத்திற்கும் அகில இலங்கைரீதியாக மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் இடை $\bar{X}$, நியமவிலகல் σ என்பன கணிக்கப்பட்டு அதன்மூலம் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற Z புள்ளி, அவன் பெற்ற புள்ளிக்கமைய -

$$Z = \frac{(X-\bar{X})}{\sigma}$$ என்னும் சமன்பாட்டின்

மூலம் கணிக்கப்படுகிறது. இவ்வாறு க.பொ.த (உ/த) பரீட்சையில் மாணவன் தோற்றிய மூன்று பாடத்திற்குமுரிய Z புள்ளிகள் வெவ்வேறாகக் கணிக்கப்பட்டு, இம்மூன்று Z புள்ளிகளினதும், இடை Z புள்ளியாக, மூன்று Z புள்ளிகளின் கூட்டுத்தொகையை 3 ஆல் வகுத்துப் பெறப்படுகிறது. இதுவே மாணவனுக்குரிய Z புள்ளியாக வெளியிடப்படுகிறது.

**Z புள்ளிமுறை மொத்தப் புள்ளிமுறையை எவ்வாறு பாதிக்கிறது எனப் பார்ப்போம.**

1) **வேறுபட்ட தெரிவுகளிலுள்ள பாதிப்பு**

குறித்த ஓர் காலப்பகுதியில் நடாத்தப்பட்ட உயர்தரப் பரீட்சையில் பின்வரும் பாடங்களின் இடை, நியமவிலகல்கள் அட்டவணையிலுள்ளவாறு காணப்பட்டது எனக் கருதுவோம்.

| பாடம் | $\bar{X}$ | σ |
|---|---|---|
| கணக்கியல் | 54.4 | 3.6 |
| பொருளியல் | 51.6 | 6.8 |
| அளவையியல் | 60.7 | 9.5 |
| வணிகக்கல்வி | 43.4 | 5.4 |

A என்ற மாணவன் பின்வருமாறு புள்ளிகளைப் பெறுகின்றான் எனக் கொள்வோம்.

கணக்கியல் = 65 புள்ளிகள்
பொருளியல் = 78 புள்ளிகள்
வணிகக்கல்வி = 55 புள்ளிகள்

B என்ற மாணவன் பின்வருமாறு புள்ளிகளைப் பெறுகின்றான் எனக் கொள்வோம்.

கணக்கியல் = 68 புள்ளிகள்
பொருளியல் = 52 புள்ளிகள்
வணிகக்கல்வி = 80 புள்ளிகள்

மொத்தப்புள்ளி முறைப்படி

A பெறும் மொத்தப்புள்ளி = 198
B பெறும் மொத்தப்புள்ளி = 200

இதன்படி மொத்தப்புள்ளி அடிப்படையில் மாணவன் B, மாணவன் A யை விடக் கூடிய நிலையிலுள்ளான்.

Z புள்ளி முறைப்படி

A என்ற மாணவன் கணக்கியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{65-54.4}{3.6}$

$= 2.9444$

A என்ற மாணவன் பொருளியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{78-51.6}{6.8}$

$= 3.8824$

A என்ற மாணவன் வணிகக்கல்வி பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{55-43.4}{5.4}$

$= 2.14815$

எனவே, மாணவன் A பெறும் Z புள்ளி

$$= \frac{2.9444+3.8824+2.14815}{3}$$

$= 2.9917$

B என்ற மாணவன் கணக்கியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{68-54.4}{3.6}$

$= 3.7778$

B என்ற மாணவன் பொருளியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{52-51.6}{6.8}$

$= 0.0588$

B என்ற மாணவன் அளவையியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{80-60.7}{9.5}$

$= 2.03158$

எனவே, மாணவன் A பெறும் Z புள்ளி

$$= \frac{3.7778+0.0588+2.0316}{3}$$

$= 1.9561$

ஆகவே, Z புள்ளியின்படி மாணவன் A- மாணவன் B ஐ விடக்கூடிய நிலையிலுள்ளான்.

2) **ஒரே பாடத்தெரிவுள்ள மாணவரிடையே உள்ள பாதிப்பு**

குறித்த ஓர் வருடத்தில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களுக்கான இடை, நியமவிலகல் என்பன பின்வருமாறு காணப்பட்டன எனக் கருதுவோம்.

| பாடம் | இடை | நியமவிலகல் |
|---|---|---|
| இணைந்தகணிதம் | 50.51 | 8.44 |
| பௌதீகவியல் | 51.04 | 6.53 |
| இரசாயனவியல் | 47.74 | 5.15 |

இப்பரீட்சையில் லோஜி என்னும் மாணவி பெற்ற புள்ளிகள் பின்வருமாறு

இணைந்த கணிதம் = 76 புள்ளிகள்
பௌதீகவியல் = 69 புள்ளிகள்
இரசாயனவியல் = 61 புள்ளிகள்

தற்போது லோஜி பெற்ற Z புள்ளியைப் பார்ப்போம்.

இணைந்த கணிதத்தில் பெற்ற Z புள்ளி



$= \frac{76-50.51}{8.44}$

$= 3.02014$

பௌதீகவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{69-51.04}{6.53}$

$= 2.75038$

இரசாயனவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{61-47.74}{5.15}$

$= 2.57476$

ஆகவே லோஜி பெற்ற Z புள்ளி

$$= \frac{3.02014=2.75038+2.5747}{3}$$

$= 2.7818$

ஆனால், லோஜி பெற்ற மொத்தப்புள்ளி
$= 76+69+61$
$= 206$

இப்பரீட்சையில் சுஜித்தா என்னும் மாணவி பெற்ற புள்ளிகள் பின்வருமாறு

இணைந்த கணிதம் = 65 புள்ளிகள்
பௌதீகவியல் = 75 புள்ளிகள்
இரசாயனவியல் = 63 புள்ளிகள்

தற்போது சுஜித்தா பெற்ற Z புள்ளியைப பார்ப்போம்

இணைந்த கணிததில பெற்ற Z புள்ளி $= \frac{65-50.51}{8.44}$

$= 1.71682$

பௌதீகவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{75-51.04}{6.53}$

$= 3.66922$

இரசாயனவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{63-47.74}{5.15}$

$= 2.96311$

ஆகவே சுஜித்தா பெற்ற Z புள்ளி

$$= \frac{1.71682+3.66922+2.96311}{3}$$

$= 2.7831$

ஆனால், சுஜித்தா பெற்ற மொத்தப்புள்ளி
$= 65+75+63$
$= 203$

| மாணவர் பெயர் | மொத்தப் புள்ளி | Z புள்ளி |
|---|---|---|
| லோஜி | 206 | 2.7818 |
| சுஜித்தா | 203 | 2.7831 |

இங்கு பெறப்பட்ட முடிவுகளின்படி பின்வரும் அட்டவணையைக் கவனிக்குக.

இதன்படி நோக்கும்போது, மொத்தப்புள்ளி முறையில் லோஜி முதல் நிலையில் உள்ளாள். ஆனால், Z புள்ளிப்படி சுஜித்தாவே முதல்நிலையில் உள்ளாள்.

எனவே, Z புள்ளி முறையை எடுத்து நோக்கும்போது - பாடச் சேர்மானம், இடையிலிருந்து பெற்ற புள்ளி விலகியிருக்கும் தன்மை என்பதற்கேற்ப, மொத்தப்புள்ளி முறையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றபோதிலும், இம்முறையினால் பாடங்களின் கடினத் தன்மை தவிர்க்கப்பட்டுள்ள ஓர் நிலையே காணப்படுகிறது.

தற்போது நாங்கள் வேறுபட்ட பாடச்சேர்மானமுள்ள A,B என்னும் இரு மாணவர்களையும், ஒரே பாடச்சேர்மானமுள்ள லோஜி, சுஜித்தா என்னும் இரு மாணவிகளையும் எடுத்து நோக்கினோம். இதிலிருந்து நாம் எடுக்கும் முடிவு என்னவெனில், வழமையான மொத்தப் புள்ளி முறையை - இந்த Z புள்ளி முறையானது, மாணவர் B இற்கும், மாணவி லோஜிக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறலாம். இருந்தபோதும், எமது நாட்டிலுள்ள வேறுபட்ட பாடச் சேர்மானங்களிலுள்ள பாடங்களின் இலகுத்தன்மை முற்றிலும் வேறுபட்டதாகவே உள்ளது. அதாவது வணிகக்கல்வியிலும், அளவையியல் இலகுவான ஓர் பாடமாகும். எனவே, அளவையியல் எடுப்பவர் மொத்தப் புள்ளிமுறையில் கூடிய புள்ளி எடுக்க வாய்ப்பு உள்ளது. ஆனால், Z புள்ளி முறையானது இப்பிரச்சினைக்குத் தீர்வளிக்கிறது. அத்துடன், நான்கு பாடத்திலிருந்து மூன்று பாடமாகக் குறைக்கப்பட்டபோது, கலைப்பிரிவு மாணவர்களில் பெரும்பாலானோர் பொருளியல் என்னும் பாடத்தினை எடுப்பதில்லை. ஆனால், தற்போதைய Z புள்ளி முறையானது, பொருளியலை ஓர் பாடமாக எடுக்கும் கலைப்பிரிவு மாணவர்களுக்கும் ஓர் வரப்பிரசாதமாகும். மேலும் பௌதகவியல், விவசாயவிஞ்ஞானம் போன்ற பாடத் தெரிவுகள் மற்றும் சமயரீதியான பாடத்தெரிவுகளிலும் கடின இலகுத் தன்மைகள் காணபபடுகிறது. எனவே, இவ்வகையான பிரச்சினைகளுக்கு இந்த Z புள்ளி என்னும் நியமப்புள்ளி முறை தீர்வளிக்கிறது என்றே கூறமுடியும்.

Z புள்ளியானது பரீட்சைக்குத் தோற்றும் மொத்த மாணவர்களினதும் பரம்பலிலேயே தங்கியுள்ளது. இந்த Z புள்ளியின் ஆளுமையில் ஒவ்வொரு மாணவனும் தங்கியுள்ளான். எமது நாட்டிலுள்ள மாணவர்களின் கல்வி நிலையை எடுத்து நோக்கும்போது, பின்தங்கிய கிராமப்புறமாகவும், வசதிகூடிய நகர்ப்பகுதிகளாகவும், பலவாறாக அமைந்துள்ளபடியினால் - மாணவர்களின் குடித்தொகை ஏகவினமானதாக அமையாது போகலாம். எனவே, Z புள்ளிக் குடித்தொகைப் பரம்பலுக்கேற்ப சிறு மாற்றம் செய்யலாமே தவிர, இதனை முற்றாக நிராகரித்துவிட முடியாது என்றே கூறலாம்.

த.நித்தியானந்தம்

# மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 15

அண்மையில் அமரத்துவமடைந்த நோயியல் நிபுணர் டொக்டர் பரமேஸ்வரி சின்னப்பாவிடமிருந்து பெற்ற தகவல்களையும், தசாவதனி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுப் பேருரையொன்றை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் முன்னாள் விரிவுரையாளர் ஆனந்தரூபி ஏகாம்பரமூர்த்தி அந்த நினைவுப் பேருரையில், நோய்கள் பற்றிக் குறிப்பிடப்பட்ட "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற உணர்வுடன், எழுதப்பட்ட இந்தக் கட்டுரையால் மக்கள் நோய்கள் வரமுன் காத்துப் பயனடைய வேண்டும்.

மிருகங்களை வளர்ப்போர், வளர்ப்பு மிருகங்களுக்கு மிருக வைத்திய சிபார்சுக்கமையக் குடற்புழு நீக்க மருந்துகளை உரிய கால இடைவெளியில் கொடுத்தும், உரிய தடுப்பூசிகளை உரிய கால இடைவெளிகளில் ஏற்றுவித்தும் மிருகங்களதும், தங்களதும் ஆரோக்கியத்தைப் பேணவேண்டும். வளர்ப்பு நாய்களை மலங்கழிப்பதற்காக வீதிகளுக்கு அனுப்புதல், சுகாதாரத்தைக் கெடுக்கும் நடவடிக்கை என்பதையும், இது தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் உணரவேண்டும். கர்ப்பிணிகள் - நாய், பூனைகளுக்குக் குளிப்பாட்டுவதைத் தவிர்க்கவேண்டும்.

அத்துடன், உடம்பைச் சிலிர்த்து உதறும் நாய்களை அருகில் வைத்திருத்தலையும், வீட்டினுள் நுழைய அனுமதித்தலையும் தவிர்க்கவேண்டும். நிலத்தில் காயப்போட்ட துணிகளைச் சூட்டழுத்தல் செய்யாது பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும்.

பற்றீரியாக்கள், ஸ்பைரோகேற்றுகள், கிளமீடியாக்கள், வைரஸுக்கள், பிறையோன்கள், புறட்டோசோவாக்கள், பங்கசுக்கள் என்பன கிருமிகள் என்று பொதுவாகப் பொதுமக்களால் குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் மிருகங்கள் மூலம் பரவலடைந்து, மனிதருக்கு நோய் தருபவற்றைப் பிரித்துக்காட்டி, இந்தக் கட்டுரை மூலம் விளங்க வைக்கப்பட்டுள்ளது.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

ச.ஆ.கோபாலமூர்த்தி

முற்றும்.

# ஆப்கான் குண்டுவெடிப்பில் பதினைந்து பயணிகள் பலி!

ஆப்கானிஸ்தானின் தென்பகுதி மாகாணமான கெல்மண்ட் என்ற இடத்தில் நடந்த மினிபஸ் குண்டுவெடிப்பில் 15 பயணிகள் கொல்லபபட்டனர். மாகாணத் தலைநகர் லங்கார்காவை நோக்கி பஸ் சென்றுகொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

அண்மைக்காலத்தில் ஆப்கானில் வன்முறைத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. தலிபான் இயக்கத்தில் மீதமாக உள்ளவர்கள், பாகிஸ்தானில் இருந்து இயங்கிவரும் அல் - கொய்டா போராளிகள் மீதும் இக் குண்டு வெடிப்புத் தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.



கராச்சி துறைமுகத்தில் தரைதட்டிய தஸ்மன் ஸ்பிரிட் கப்பலை சிறிய படகு கடந்து செல்கிறது.

உலகவலம்

## அமெரிக்காவிற்குள்

# ஏவுகணையைக் கடத்த முயன்ற மூவர் பொலிஸாரால் கைது!



ரஷ்யாவில் தயாரான நிலத்திலிருந்து ஆகாயத்தை நோக்கிச் செலுத்தக்கூடிய ஏவுகணையை, அமெரிக்காவுக்குக் கடத்திச்செல்ல முயற்சித்ததாக பிரித்தானியர் ஒருவரும், வேறு இருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அமெரிக்க குற்றப்புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த (FBI) அதிகாரி ஒருவர், தன்னை முஸ்லிம் தீவிரவாதி எனத் தெரிவித்து - அதை வாங்குவதற்கு முயல்வது போன்று காண்பித்து, அவர்களைக் கைது செய்திருந்தார்.

'இக்லா' என அழைக்கப்படும் அந்த ஏவுகணை 4 கிலோமீற்றர் வரை செலுத்தக்கூடியதெனவும், 'இன் பரா ரெட்' எனப்படும் கதிர் மூலம் இருளில் செலுத்தக்கூடிய வசதிகளையும் கொண்டிருந்தது.

இஸ்லாமிய தீவிரவாதிகள் இவற்றின் உதவியுடன், உள்ளூர் விமானங்களைத் தாக்குவதற்கு முயற்சிக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஆனால், வொஷிங்ரன் அதிகாரிகள் - இந்த ஏவுகணையின் உதவியுடன் அமெரிக்க அதிபரின் தனிப்பட்ட பாவனைக்காகப் பயன்படுத்தப்படும் விமானத்தைத் தாக்க முயற்சித்திருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

# லைபீரிய ஜனாதிபதி வெளியேறியதையடுத்து; ஐ.நா.சபை மனிதநேய உதவிகள் வழங்கத் தயார்

லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லர், கடந்த திங்கட்கிழமை நாட்டிலிருந்து வெளியேறியதையடுத்து ஐக்கிய நாடுகள் சபை - மனிதநேய உதவிகளை வழங்குவதற்கு தயாராகி வருகிறது.

உலக உணவுத் திட்டத்தின் மூலம் உணவுக் கப்பலொன்று துறை முகத்திற்கு வெளியே காத்திருப்பதாக - லைபீரியாவின் அவசரகால நிவாரணப் பணிகளுக்குப் பொறுப்பாகவுள்ள கரோலின் மைக் ஆசிக் தெரிவித்துள்ளார்.



உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு, லைபீரியாவிற்கு அருகில் உள்ள நாடுகள் தயாராகவுள்ளன.

செவ்வாயன்று மொன்ரோவியாவிலுள்ள கிளர்ச்சியாளர்கள், தமது நிலைகளிலிருந்து விலகியுள்ளார்கள். உணவுப் பொருட்களும், வேறு உதவிகளும் தடையின்றி நாட்டிற்குள் செல்வதற்கு உதவியாக இருக்கும் என, லைபீரியாவிற்கான அமெரிக்கத் தூதுவர் யோன் பிலானே தெரிவித்திருந்தார்.

மேலும், தென் ஆபிரிக்க சமாதானப் படையினர் இன்று மதியம் வந்து சேர்வார்கள் எனவும் தெரிவித்தார். ஏற்கனவே துறைமுகத்திலுள்ள உணவுக் களஞ்சியங்களில் சேர்த்து வைத்துள்ள உணவு சூறையாடப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, புதிதாக பதவியேற்றுள்ள இடைக்கால ஜனாதிபதி மெசெஷ் பிலா - நாட்டை திரும்பவும் கட்டியெழுப்புவதற்கு, கிளர்ச்சியாளர்கள் வன்முறையைக் கைவிட்டு விடவேண்டும் எனக் கேட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.



லைபீரியாவின் லூட் போராளிகள் மொன்ரோவியாவில் உள்ள பாலத்திற்கருகே ஆடிப்பாடும் காட்சி.

## ஐ.நா.சமாதானப்படை கோரும் நாடுகள் அதிகரிப்பு!

ஈராக்கிலும் லைபீரியாவிலும் அதிகரித்து வரும் குழப்பங்கள் எவ்வாறு எதிர்நோக்கலாம் என சர்வதேச நாடுகள் சிந்திக்க முற்பட்டுள்ளது.

ஈராக்கில் அமெரிக்கப் படையும் ஆப்கானிஸ்தானில் நேட்ரோ தலைமையில் அமைதிப் படையும் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளன.

இதனால் ஐக்கிய நாடுகள் சபை சமாதானப் பணிக்கு முன்வருமாறு கோரி நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்வது குறிப்பிடத்தக்கது.




## இந்தோனேசியாவிலிருக்கும்

# அமெரிக்க, அவுஸ்ரேலிய பிரஜைகளை எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் வாழும் அமெரிக்க, அவுஸ்ரேலியப் பிரஜைகளை - சர்வதேச விடுதிகள், விற்பனை நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து விலகியிருக்குமாறு அந்த நாட்டு அரசுகள் கேட்டுள்ளன.

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் அமைந்துள்ள 'மறியோற்றி' விடுதியில் ஓகஸ்ட் 5 இல் நடைபெற்ற கார்க்குண்டுவெடிப்பில், 12 பேர்வரை கொல்லப்பட்டிருந்தார்கள்.

இதையடுத்தே, மேலும் குண்டு வெடிப்புகள் தொடரும் சாத்தியங்கள் இருப்பதாக, அவுஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் "டவுனர்" செய்தியாளர்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்தோனேசியாவில்- வெளிநாட்டவர்களுக்கு ஏற்படவுள்ள ஆபதுக்கள் தொடர்பாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியப் பாதுகாப்பு அமைச்சர் - வியாழனன்று நாடாளுமன்றத்தில் பாதுகாப்புச் சட்டங்களை வலுப்படுத்துவது தொடர்பாக, விவாதித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



[illegible]குபா என்ற இடத்தில் அமைந்த அமெரிக்கப் படைத் தலைமையக[illegible]தின் முன் சீட்டி மதத் தலைவர்கள்.

## சொலமன் தீவுகளின்

# கிளர்ச்சித் தலைவர் கரோல்ட் கெகி சமாதானப் படையினரிடம் சரண்!

(ஆஸ்திரேலியா)

சொலமன் தீவுகளின் கிளர்ச்சித் தலைவர் கரோல்ட் கெகி, அவுஸ்திரேலிய சமாதானப் படையினரிடம் சரணடைந்துள்ளார்.

கரோல்ட் கெகி, ஆரம்ப காலத்தில் பொலிஸ் படையில் சேவை புரிந்தவராவார். பின்னர், இசராபு சுதந்திர இயக்கத்தில் (IFM) செயற்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது இயக்கம் பல கொலைகள் தொடர்பாக கண்டிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அமைச்சர், கத்தோலிக்க சமய பாதிரியார் ஆகியோரின் மரணத்துக்குக் காரணமாக இருந்தது. கைளடாங்கனல் தீவில் உள்ள வெதர்கோஷ்ட் என்ற இடத்தில் அங்குள்ள சர்வதேச மிஷன் அதிகாரியிடம் சரணடைந்துள்ளார்.



# [illegible]வூதி தலைநகரில் துப்பாக்கிச்சூடு நான்கு பொலிஸார் பலியாகினர்!

சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாட்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சூ[illegible]டு சம்பவத்தில் - நான்கு சவூதி அ[illegible]ரபிய பொலிஸாரும், ஒரு முஸ்லிம் தீவிரவாதியும் கொல்லப்பட்டுள்ளார்கள்.

'சுவைடி' என்ற மக்கள் வாழும் பகுதியில் - நேற்றுமுன்தினம் ஐந்து மணித்தியாலங்கள் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகவும், அல்-கொய்டா இயக்கத்தைச் சேர்ந்த ஏழுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், சவூதி உள்நாட்டு அமைச்சு தெரிவித்திருந்தது. மே மாதம் 12 ஆம் திகதி வெளிநாட்டினருக்கெதிராக நடந்த தாக்குதலில், 35 பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

பிரித்தானியர்களை மையமாகக் கொண்டே, இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என, பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சு தெரிவித்தது.

# ஈராக்கில் கெரில்லாத் தாக்குதல் இரு அமெரிக்கப் படையினர் பலி

ஈராக்கில் நடத்தப்பட்ட கெரில்லாத் தாக்குதல்கள் மூலம் இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாக - அமெரிக்க இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த மே மாதம் ஈராக் மீது- அமெரிக்கா போர் தொடுத்ததில் இருந்து 60 படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

நேற்று அமெரிக்க படையினரின் தொடர் அணி மீது - கெரில்லாக்கள் தொடுத்த தாக்குதலிலேயே மேற்படி படையினர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் சதாமின் நகரமாகிய ரிக்றிற் இருந்து 15 மைல்களுக்கு அப்பால் நடத்தப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மடுமாதா ஆலயத்தில் 2 லட்சம் பக்தர்கள்; 24 மணி நேரமும் போக்குவரத்துக்கு வசதி!

(மன்னார்)

மடுமாதா உற்சவத்தினை முன்னிட்டு, அங்குவரும் யாத்திரிகர்களின் நலன்கருதி - இன்றும், நாளையும் மடுவீதி இருபத்துநான்கு மணிநேரமும் திறந்திருக்குமென, மடுமாதா ஆலய பங்குத்தந்தை அருட்திரு பிலிப் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நாளையும், நாளைமறுதினமும் வரும் யாத்திரிகர்கள், தங்களது பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை போன்றவற்றின் மூன்று பிரதிகளை, மடுவீதியிலுள்ள இராணுவத்தினரிடம் கையளித்துவிட்டு வரவேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் - யாத்திரிகர்களின் பிரயாணத்தை இலகுபடுத்தும் நோக்குடன், இருபகுதியினரதும் சோதனைச் சாவடிகளிலும் இரண்டு பாதிரியார் வீதம் பிரசன்னமாகியிருப்பர்.

நேற்றுவரை, மடு ஆலயப்பகுதிக்கு இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் வந்து சேர்ந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(201)

## பருத்தித்துறை வீதியில் தனியார் பஸ்களை செல்லவிடாது பொதுமக்கள் தடுத்து நிறுத்தினர்!

(யாழ்ப்பாணம்)

யாழ் - பருத்தித்துறை வீதியில் சென்ற அனைத்து தனியார் மினி பஸ்களையும் தொடர்ந்து செல்ல விடாது, ஆவரங்கால் பகுதி மக்கள் நேற்று தடுத்து நிறுத்தினர்.

நேற்றுமுன்தினம், இந்தப் பகுதியில் தனியார் மினிபஸ் ஒன்றினால் மோதுண்டு, இளைஞர் ஒருவர் பலியானதையடுத்தே, இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தையறிந்த பொலிஸார், அந்த இடத்திற்குச் சென்று, நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் - காலை பதினொரு மணியளவில் வடமராட்சி அரசியற்துறையினரும், யாழ்.மாவட்ட தனியார் ஊர்திச்சங்க இணையத் தலைவரும் - மறியலில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடியதையடுத்தே, மக்கள் பஸ் பயணத்தினைத் தொடர அனுமதித்தனர்.

## கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் வட - கிழக்கு ஊழியர்கள் ஆதரவளிக்க வேண்டாம்!

### மட்டு. வெகுஜன அமைப்பு கோரிக்கை

பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டம், முற்றுமுழுதாக அரசியல் பின்னணி வாய்ந்தது. வடக்கு-கிழக்கு ஊழியர்கள், அதற்கு ஆதரவு தெரிவிக்கவேண்டாம் என, மட்டக்களப்பு வெகுஜன அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராகவும், சமாதான பேச்சுவார்த்தையை குழப்பும் நோக்கிலும் - ஜே.வி.பியினரின் பின்னணியில் பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டம் நடத்தப்பட்டுவருகின்றது.

ஜே.வி.பியின் சமாதான விரோத போக்குக்கு ஆதரவு தெரிவிக்கும் நடவடிக்கையாகவே, வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் அமைந்துவருகிறது.

வடக்கு - கிழக்கு மக்களின் இந்த ஆதரவானது, தற்கொலைக்கு ஒப்பான செயலாவே அமைகின்றது. சமாதான விரோதச் செயலாகவும் காணப்படுகிறது.

எனவே, பல்கலைக்கழக ஊழியர் வேலைநிறுத்தத்தில், வடக்கு-கிழக்கு மக்கள் ஆதரவு தெரிவிக்க வேண்டாம் என, மட்டக்களப்பு வெகுஜன அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கிணற்றில் தவறிவீழ்ந்து சிறுவன் பரிதாப மரணம்!

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறிவீழ்ந்து சிறுவன் ஒருவன், பரிதாபகரமாக மரணமடைந்தார்.

நேற்றுமாலை, கொக்குவில் அச்சக வீதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில்,அதேயிடத்தைச் சேர்ந்த காத்திகேசு கசீபன் (வயது 12) என்பவரே மரணமானவராவார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இன்று மரணவிசாரணைகள் இடம்பெற்ற பின், சடலம் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சடலம்...

இச்சடலத்தினை அடையாளம் காண உதவுமாறு, இந்தியத் தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டபோதிலும், இதுவரை, அது சம்பந்தமாக நடவடிக்கை எதுவும் தூதரகத்திலிருந்து எடுக்கப்படாமையினாலேயே இந்தச் சடலம் தகனம் செய்யப்பட்டுள்ளது.

(201)

## ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்பினார்

(கொழும்பு)

சீனாவிற்கான நான்கு நாள் விஜயத்தை முடித்துக்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று மாலை 5.45 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இந்த விஜயத்தின்போது - சீன ஜனாதிபதி யூஜின்டா உட்பட, அந்த நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களையும், பிரமுகர்களையும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இலங்கைக்கு பொருளாதார ரீதியாக பயன்தரக்கூடிய ஐந்து ஒப்பந்தங்களும், பிரதமரின் இந்த விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்டன. சீன முதலீட்டாளர்களை, இலங்கைக்கு கவரும் நோக்கில், பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாகவும், பிரதமரின் செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதானப் பேச்சுக்களை...

தொடர்ந்து 11 மணிக்கு சமாதானச் செயலகத்தில் - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளருக்கும் நோர்வே தூதுக்குழுவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தை இரண்டு மணித்தியாலங்கள் நீடித்தன. இதன் பின்னர், நோர்வே தூதுக்குழுவினர் கொழும்பு புறப்பட்டுச் சென்றனர்.

கொழும்பு திரும்பிய எரிக் சொல்ஹெய்ம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றிரவு சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேசிய விடயங்கள் தொடர்பாக, பிரதமருக்கு விளக்கினார்.

(108)

## நோர்வே...

யாழ்.வரும் இவர், யாழ்.அரச சார்பற்ற இணையத்தில் வைத்து - இணைய அதிகாரிகளையும், வண. பிதா பேர்ணாட், கியூடெக் இயக்குநர் வண.பிதா ஜெயக்குமார் ஆகியோரையும் சந்திப்பதுடன், யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சென்று, பிராந்திய இணைப்பாளர் றுவான் சந்திரசேகர உட்பட பலரையும் சந்திக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## தாய்லாந்து பிரதமருடன் சந்திரிகா,ரணில் பேச்சு!

(கொழும்பு)

தாய்லாந்து பிரதமர் "தக்ஷின் சினவத்ரா", இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். தனது இரண்டு நாள் விஜயத்தின்போது, ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளார். இன்று இலங்கைவரும் தாய்லாந்து பிரதமர், நாளை நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்து பிரதமரின் விஜயத்தையொட்டி- இன்றும், நாளையும் சில வீதிகள் மூடப்பட்டிருக்குமென, கொழும்பு போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்கமைய, இன்று காலை ஒன்பது மணியிலிருந்து - கட்டுநாயக்கா பதினெட்டாவது மைல்கல், நீர்கொழும்பு கொழும்புவீதி, நவலோக சுற்று வட்டம், ஜப்பான் உறவுப்பாலம், சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, இந்துருகொட சந்தி, கோட்டை விகாரை வீதி, லோட்டஸ்வீதி, செரமிக் வீதி மற்றும் , யோக் வீதி, என்பன மூடப்பட்டிருக்கும்.

## கிளைமோர்...

போதனாவைத்தியசாலையிலும், அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களில்- பரமேஸ்வரன் ரதியின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக, வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடற்கரையில் கிடந்த கிளைமோர் குண்டை எடுத்துவந்து, அதனைக் கல்லுடைக்கும் சுத்தியலால் அடித்தபோது, அது வெடித்ததாகத் தெரியவருகின்றது.

தற்போது பாடசாலை விடுமுறைக் காலமாகையால் - சிறுவர்கள் சேர்ந்து விளையாடியபோது, இக்கோரச்சம்பவத்திற்கு ஆளாகினர். அண்மைக்காலமாக வெடிபொருள்களின் அனர்த்தங்களினால்- பலர் ஊனமாவதும், மரணங்கள் ஏற்படுவதும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குரங்குப்பாஞ்சான் முகாம்...

முடிவும் எட்டப்படவில்லை. இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களும், சிங்கள இனவாத அமைப்புக்களும் இதனை பெரிதுபடுத்துவது, எங்களுக்கு விளங்கவில்லை. ஆனால், நாங்கள் நீண்டகாலமாக அங்கு முகாம் அமைத்திருக்கின்றோம். போராளிகள் அங்கு நீண்டகாலமாக தங்கியிருக்கின்றனர். இந்த நிலைப்பாட்டை நாங்கள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்த தயாராக இருக்கின்றோம்.

இதேவேளை திட்டவரைபு குறித்து ஆராய்வதற்காக, வன்னியிலிருந்து பாரிஸிற்கு நாங்கள் செல்லவுள்ளோம். இந்தக் குழுவில் இடம்பெறவுள்ளோர் தொடர்பான பெயர் விபரங்களை மிகவிரைவில் வெளியிடுவோம்.

சொல்ஹெய்முடனான இந்த சந்திப்பின்போது, இலங்கை இராணுவத்தினருடைய போர்நிறுத்த மீறல்கள், இராணுவ நெருக்கடிகள் அதிகரிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பாகவும், ஏற்கனவே, நடைபெற்ற போர்நிறுத்த மீறல் சம்பவங்கள் தொடர்பாகவும் குறிப்பிட்டுக்காட்டப்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை, மீளவும் ஆரம்பிப்பது பற்றி, விடுதலைப் புலிகளின் தரப்பு நியாயங்களையும், எதிர்பார்ப்புக்களையும், தீர்மானங்களையும், மிகவிரைவில் அரசாங்கத்திற்கு சமர்ப்பி[illegible]விருக்கின்றோம். அரசாங்கம் அதனை சாதகமாக பரிசீலித்து, சாதகமான நிலைப்பாட்டை எடுத்தால், மீண்டும் பேச்சுக்களை தொடர்வதற்கான சாத்தியக்கூறு இருக்கும் என, நான் கருதுகிறேன்.

அமெரிக்கா, எங்கள் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு புறம்பானது. அமெரிக்காவின் இந்த குற்றச்சாட்டு, ஒரு தரப்பு கருத்துக்களைக் கொண்டு, எடுக்கப்பட்ட நிலைப்பாடாகும். இதன் உண்மை நிலை தெரியவரும்போது, அவர்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.




CHEMISTRY CENTRE
Temple Road, நல்லூர்.
A/L 2005
"GENERAL CHEMISTRY"
பிரிவு I: Mon.Fri. 3-4 p.m.
பிரிவு II: Tue.Thur. 3-4 p.m.
"வெப்ப இரசாயனம்"
பிரிவு I: Wed. 6.30-7.30 a.m.
பிரிவு II: Wed. 3-4 P.m.
Basic மீட்டலுடன் கூடிய வினா விடை
(சி-1347)
By.அன்பழகன்

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி யாழ்.நகர்
A/L 2004
DAY CLASS
பிரிவு-11
CHE - திரு.அன்பழகன்
PHY - திரு.சிவலிங்கம், திரு.பிரபா
BIO - திரு.நாகநாதன்
MATHS- திரு.குணசிங்கம், திரு.ராஜன்
பாடஅலகுகளைப் பூர்த்திசெய்யாத மாணவர்களுக்கு விசேட [illegible]ழுங்கு மேற்கொள்ளப்படும்.
([illegible]1346)

லொத்தர்
விற்பனைக்கு ஆட்கள் தேவை
தேசிய, அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ். மாவட்ட முகவரிடமிருந்து ரிக்கட்டுக்களை பெற்று விற்பதற்கு ஆட்கள் தேவை. சிறந்த கொமிசன் வழங்கப்படும்.
எஸ்.எம்.அதிஷ்டம்,
55, முனீஸ்வரர் வீதி, யாழ்ப்பாணம்.
([illegible]345)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.